915.
491.84412
OFFICE OF THE REGISTRAR ... 27 JUL 1914 ... MADRAS.

ஸ்ரீ

தொல்காப்பியம்

பொருளதிகார ஆராய்ச்சி.

அருப்புக்கோட்டை ரேஞ்சு, பள்ளிக்கூட இன்ஸ்பெக்டரும்,
'மதுரைத் தமிழ்ச்சங்கம்' 'தமிழ்ப் புராதன சரித்ர ஆராய்ச்சிச்
சங்கம்' இவற்றின் அங்கத்தினரும்
ஆகிய
வே. முத்துஸாமி ஐயர் எம். ஏ., எல். டி.
எழுதியது.

Accn. No. 172203
64 pages

மதுரை:
தமிழ்ச்சங்க முத்ராசாலைப் பதிப்பு.

இந்நூலைப்பற்றிய எவ்வித
உரிமையும் நூலாசிரியரதே 1914

விலை அணா.

OFFICE OF THE R... 27 JUL 1914 ...OKS * MADRAS. *

DEDICATED

By kind permission

TO

HIS HIGHNESS B. RAJARAJESWARA

Muthu Ramalinga Setupati Avl.,

RAJAH OF RAMNAD

AND

Life-President, Madura Tamil Sangam.

as an humble token of the
Author's most sincere regards for
His Highness' great attachment to
and generous patronage of
Tamil Literature.

உரிமையுரை.

தமிழ்நூல்களிடத்துத் தக்கநன்மதிப்பும், தமிழ் மொழி வளர்ச்சியினிடத்து மிக்க உதாரசிந்தையும் உடையவர்களும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் சாச்வத அக்ராஸநாதிபதியவர்களும் ஆகியமாட்சிமை தங்கிய ராமநாதபுரம் ராஜா ஹிஸ் ஹைனெஸ் பா. ராஜராஜேச்வர **முத்துராமலிங்கஸேதுபதியவர்களுக்கு,** இச்சிறுநூலை, நான் பெருவிருப்போடு, அவர்களுடைய உடன்பாடுபெற்று, உரிமையாக்குகின்றேன்.

2. இவ்வுரிமையைப் பெறுதற்கு ஒருப்பட்டு என்னைச்சிறப்பித்த இப்பெருந்தகையாளர்மாட்டு நான் என்றும் மறவா நன்றிபூண்டொழுகுவதோடு, அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளவிறந்தோங்கவென்று எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளின் திருவருளைவழுத்துகின்றேன்.

அறுப்புக்கோட்டை,
5—7—14.

இங்ஙனம்,
வே. முத்துஸாமிஐயன்.

நன்றியுரை.

இச் சிறு ஆராய்ச்சிநூல் வெளிவருதற்கு வள்ளன்மையும் பாஷாபிமானமும் படைத்துள்ள பண்புடையாளர் சிலருடைய பெருந் தன்மைக்குணம் பெரிதும் காரணமாக உள்ளது. ஆதலின் நான் அவர்களுக்கு ஈண்டு நன்றிகூறல் இன்றியமையாக் கடப்பாடாகும்.

சென்ற 1912-ஆம் ஆண்டில் கொழும்பு, ஸ்ரீமான் கு. ஸ்ரீகாந்த முதலியார் அவர்கள் லிட். டி. (Litt. D.) இவ்வாராய்ச்சியைச் செவ்வனே செய்பவருக்கு ரூ 200 பரிசு அளிப்பதாகப் பத்ரிகைகளில் ப்ரசரம் செய்தனர். ஆங்கிலங்கற்றோர் அருந்தமிழை யோதாது நீங்கிவரும் இக்காலத்தில், ஆங்கிலநாடு சென்று அருங்கலை பயின்று உயர்தரப் பட்டம்பெற்ற இம் முதலியாரவர்கள் (முதன்மையானவர்கள் என்றபடி) தம் தாய்மொழிமாட்டெழுந்த அபிமானமிகுதியால் இவ்வாறு தமிழ்நூலுக்குப்பரிசளிக்க முன்வந்தது யாவராலும் மிகவும் நன்குமதிக்கற்பாலது. மேற்குறித்தஸ்ரீமான் முதலியாரவர்களது விளம்பரமே என்னை இம்முயற்சிசெய்யத் தூண்டிற்றாகலின், எனக்கு அவர்களுடைய பரிசு கிடைத்திலதெனினும்,* நான் என்னுடைய முதல்நன்றியை முதலியாரவர்களுக்கே செலுத்துகின்றேன்.

இந்நூலின் காகிதம் பைண்டிங் இவற்றிற்காக, வணிகர்தங்குல மணிபோல்பவரும், வண்மையும் செல்வமும் வாய்க்கப் பெற்றவரும், ஆண்டிப்பட்டி ஜமீன்தாரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் நிரந்தர போஷகரும், உப-அக்ராஸநாதிபதியும் ஆகிய ஸ்ரீமான் கானாடுகாத்தான் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்கள் ரூ 30 பொருளுதவி செய்தார்கள். இவர்களுடைய வள்ளன்மையை உள்ளன்போடு வியந்து பாராட்டி, இவர்களுக்கு நான் நன்றிசேர் வந்தனம் நயந்து கூறுகின்றேன்.

சென்ற சிலமாஸங்களாகச் "செந்தமிழ்"ப் பத்ரிகையில் வெளிவந்த இவ்வாராய்ச்சியை ஒருசேரத் திரட்டிப் புத்தக உருவாக்கித் தருதற்கு ஒருப்பட்டு, அங்ஙனமே அச்சுச்செலவின்றித் தமது ஸொந்த முத்ராசாலையில் அச்சிட்டுதவிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் நிருவாக ஸபையார்மாட்டும் நான் மட்டற்ற நன்றி பாராட்டுகின்றேன்.

தங்களுக்குரிய பல அவஸரவேலைகளுக்கிடையே இச்சிறுநூலைப் படித்துப்பார்த்து, அபிப்ராயம் அனுப்பி, என்னுள்ளத்தில் ஊக்கத்தையும் உத்ஸாஹத்தையும் உண்டாக்கிய பெரியோர்களுக்கும் நான் மனப்பூர்வமாக நன்றி செலுத்துகின்றேன்.

அறுப்புக்கோட்டை,
24—5—14.

வே. முத்துஸாமி ஐயன்

---

* இப்பரிசு "செந்தமிழ்"ப் பத்திராதிபராய்த் திகழ்ந்தவரும், என்னினும் எத்துணையோ அளவு செந்தமிழறிவாற்றல்களிற் சிறந்தவரும் ஆகிய ப்ரஹ்மஸ்ரீ உ. வே. ரா. ராகவையங்காரவர்களுக்கு உரிமையிற் கிடைத்தது.

பிழையும் திருத்தமும்.

:(o):

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	3	12-வதுவருஷோத்சவ	12-ஆவதுவருஷோத்ஸவ
1	17	பொருளுடைத்தாகலின்,	பொருளுடைத்தாகலின்.
2	3	திரணதூமக்கியார்	திரணதூமக்கினியார்
2	5	வந்தது.	வந்தது,
3	13	பாடல்	பாடல்கள்
5	கடைசிவரி	காணப்படும.	காணப்படும்,
9	18	திரு	திருக்
10	11	பண்டைகாலத்து	பண்டைக்காலத்து
11	3	சிறப்பில்	சிறப்பியல்
11	25	உறிய	உரிய
25	14, 27	தொழி	தோழி
26	15	கண்ணெயே	கண்ணேயே
26	21	பற்குறி	பகற்குறி
33	8	அங்கயங்கடவுள்	அங்கியுங்கடவுள்
58	கடைசி வாக்யம்.	எனவும், என்றும்	என்பதும்

குறிப்பு.—நூலினளவைநோக்க அச்சுப்பிழை அதிகப்பட்டிருத்தலின், படிப்பவர், நூலைப்படித்தற்குமுன்னரே மேற்காட்டிய திருத்தங்களைச் செய்துகொள்ளல் நன்று; அங்ஙனம் செய்து கொண்டால், விகாரமான அச்சுப்பிழைகளைக் காண்பதால் விளையும் அருவருப்பு அவருக்கு இலதாகும்.

:o:

உ

தொல்காப்பியம்: பொருளதிகார

ஆராய்ச்சி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
27 JUL 1914
MADRAS.

(இவ் வாராய்ச்சி மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 12-வது வருஷோத்சவக் கொண்டாட்டத்துக்காகக் கூடிய சபையில் 25—5—13-யன்று மகா-ா-ா-ஸ்ரீ ஜெ. எம். நல்லசாமிபிள்ளை பீஏ., பீஎல்., அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் மதனப்பள்ளி ஹிந்துஹைஸ்கூல் உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ வே. முத்துசாமி ஐயர் பீஏ., எல்டி., அவர்களாற் படிக்கப்பெற்றது.)

முகவுரை.

தமிழ்மொழியில் தழைத்திருக்கும் இலக்கணங்களுளெல்லாம் மிகவும் பண்டையது தொல்காப்பியமே. அகத்தியம்* என்னும் இலக்கணநூல் தொல்காப்பியத்தினும் காலத்தால் முந்தியது எனினும், அந்நூல் இக்காலத்து முழுவதும் கிடைக்கப்பெறவில்லை. அதிலிருந்து சில சூத்திரங்களே, உரையாசிரியர்கள் மேற்கோள்களாகக் காட்டிய இடங்களிற் காணப்பெறுகின்றன. 'தொல்காப்பியம்' என்னும் பெயரே அந் நூலின் பழமைக்கு ஒருவாறு போதியசான்றாகும்; எங்ஙனமோ எனில் தொல்காப்பியம் என்னும் தொடர்மொழி பழைய நூல் என்னும் பொருளுடைத்தாகலின், தொல்காப்பியனார் இயற்

---

* "வீங்கு கடலுடுத்த வியன்கண் ஞாலத்துத், தாங்கா நல்லிசைத் தமிழ்க்கு விளக் காகென, வானோ ரேத்தும் வாய்மொழிப் பலபுகழ், ஆனாப்பெருமை யகத்தியன் என்னும், அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்" எனப் பன்னிரு படலத்தின் சிறப்புப்பாயிரத்தின்கண்ணே அகத்தியம் முதனூல் எனக் குறிக்கப்படுவதாலும், நச்சினார்க்கினியரும், தொல்காப்பிய உரைக்கண்ணே ஆங்காங்கு 'இது அகத்தியம்' எனச் சுட்டிப்போதலானும், அகத்தியம் மிகப்பழைய நூலென்பது போதரும்.

*

றியது தொல்காப்பியம், என இத் தொடர்க்குப் பொருள்கூறுவது நூன்மரபெனினும், அகத்தியனார்தம் பன்னிருமாணாக்கருள் ஒருவரும் திரணதூமாக்கினியார் என்னும் இயற்பெயருடையவரும் ஆகிய ஒரு புலவரால் இயற்றப்பட்ட இந்நூல், முன்னர் ஏதோ ஒரு பெயரால் வழங்கி வந்தது. கடைச்சங்கத்தார் காலத்திலேயே மிகப் பழையநூலெனக் கருதப்பட்டு, அக் காரணம்பற்றித் தொல்காப்பியம் என்னும் பெயர் வாய்க்கப்பெற்றதுபோலும் எனத்துணிதலும் ஓராற்றாற் பொருத்தமுடைத்தேயாகும். அஃது எவ்வாறாயினும் ஆகுக. தொல்காப்பியம் மிகப் பழைய இலக்கணநூல் என்பதே யாம் இங்குக் கூறவந்தது. கடைச்சங்கத்தார்க்கு இதுவே இலக்கணநூலென்றக்கால், இதன் தொன்மை வெள்ளிடைமலைபோல் தெள்ளிதிற் காணக்கிடக்கின்றது.

இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்தினையும் விரித்துக்கூறும். இதுபோன்று இவ்வைந்தினையும் ஒருசேரச் சிறக்க விளக்கிச்சொல்லும் நூல், பிற்காலத்தியற்றப்பெற்றதும், 'குட்டித்தொல்காப்பியம்' எனப் பேர்வாய்ந்ததும் ஆகிய வைத்தியநாததேசிகர் இயற்றிய 'இலக்கணவிளக்கம்' என்பதொன்றே என்று கூறலாம். பிற இலக்கணநூல்களுள் எழுத்தையும் சொல்லையும் எடுத்தியம்புவ சில; பொருளிலக்கணமே புகலுவ சில; செய்யுள் இயலே செப்புவ சில; அணியொன்றினையே அணிந்துரைப்பன சில; மற்றைநான்குடன் பொருளினையும விரித்துக்கூறும் சிறப்புடைய பழையநூல் தொல்காப்பியமே. அதன்கட் கூறியாங்கு, பொருளிலக்கணம் இத்தகைத்து என்பதும் அப் பொருளிலக்கணம் கருவியாக அறியப்பெறும் பண்டைக்காலத்தாரது வழக்கங்களும் நடையுடைபாவனை முதலியவைகளும் இவை இவை என்பதும் மற்றும் இவைபோல் நுணுகி அறியப்படுவன இன்ன இன்ன என்பதும், பிறவும் ஒருவாறு இவ் வியாசத்தின்கண்ணே விளக்கிக்காட்டப் படும்.

பண்டைத்தமிழ்நூல்கள்பலவற்றிற் பொதிந்துள்ள பொருள் இவை இவையென இக்காலத்தார்க்குத் திறந்துகாட்டும் திறவுகோலெனச் சிறப்புற்றுத்திகழ்வது உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்

கினியர் உரை யென்பது கற்றறிந்தோர் யார்க்கும் ஒப்ப முடிந்ததாம். அப் பேரறிவாளரது உரை யிலதேல், சங்கத்தமிழ்நூல்களிற் பல இருந்தும், அவை இக் காலத்தார்க்கு இறந்தனவேயாகும். இதனு லன்றோ,

“ பச்சைமா லனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சிலாற் றிசையு முண்ணும்; அமிழ்தென வெழுநா வேச்சில்
மெச்சிநா ளுளும் விண்ணோர் மிசைகுவர்; வேத போத
நச்சினார்க் கினிய னெச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்.” எனவும்,

“ எவனால வாயிடைவந் தமுதவா யுடையனென வியம்பப் பெற்றோன்
எவன்பண்டைப் பனுவல்பல விறவாது நிலவவுரை எழுதி யீந்தோன்
எவன்பரம உபகாரி, எவனச்சி னார்க்கினியன் எனும்பேராளன்
அவன்பாத விருபோது மெப்போது மலர்கவென தகத்து மன்னோ.” எனவும்,

நச்சினார்க்கினியர் துதியாகப் பாடல் எழுந்தன. இப்பெரி யாரது உரை இவ்வாராய்ச்சிக்குப் பெரிதும் உதவியா யிருந்ததெனல் கூறாமலே அமையும்.

கடைசியாக, இம்முகவுரையை முடிக்கு முன்னர், இங்கு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயத்தினது அருமை பெருமை யினையும், அதனை எடுத்துரைக்க முயலும் எனது அறிவின் சிறுமை யினையும் நோக்கின் நான் அவையடக்கம் கூறுவது இன்றியமையாதது ஆயிற்று. இங்கு யான் இம்முயற்சிக்கண் தமிழபிமான மேலீட்டினாற் பிரவேசிக்கின்றேனேயன்றி, தமிழ்ப்பயிற்சிமேலீட் டினால் அன்றென்பதைச் சிறிதும் உபசாரமொழியாகக்கொள் ளாது, முழுதும் உண்மைமொழியெனவேகொண்டு, இயற்கை நற்குணமுடைய இன்றமிழ்ப்புலவராயினோர், என் முயற்சியாகிய இதனை முற்றிலும் கடியாவண்ணம் அவர்களை மிக்கவணக்கத்துடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பொருட்சிறப்புமுதலியன.

தமிழ்மொழியில் இலக்கணம் எழுத்திலக்கணம், சொல்லிலக் கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என ஐவகைப்பட்டுள்ளது. பிறமொழிகளின் இலக்கணங்களை நோக்கின்,

அவற்றில் எழுத்து, சொல், யாப்பு, அணி என்னும் இந்நான்கிற்கும் இலக்கணம் காணப்படுகிறதே யன்றி, பொருட்குஇலக்கணம் இன்னதென வரையறுத்துக் கூறப்பெற்றிலது. இங்ஙனம் சிறப்பாகத் தமிழ்மொழியொன்றிலேயே, இலக்கணம் வகுக்கப்பெற்ற 'பொருள்' என்பதுதான் யாது? அது எங்ஙனம் இலக்கியங்கட்கு இன்றியமையாத் வேண்டப்படுவது? முற்காலத்து வகுக்கப்பெற்ற பொருளிலக்கணத்தால் இக்காலத்து யாம் அறிந்துகொள்ளற்பாலன யாவை? என்பவற்றைக்குறித்து இங்குச் சிறிது பொழுது ஆராய்வோம்.

'பொருள்' என்பது நூலாசிரியன் நுவல்வதற்கெடுத்துக் கொண்ட விஷயமாகும்; அவ்விஷயந்தானும், மாந்தர்க்கு உறுதி பயத்தற்பாலவென உயர்ந்தோரால் ஓதப்பெற்ற அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றில் ஒன்றையேனும், ஒன்றுக்கு மேற்பட்டவற்றையேனும் விதந்து சொல்வதாகும். இந்நான்கினையே வடநூலார் தர்மார்த்த காமமோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்கள் என்பர். உற்று நோக்கின், இந்நான்கினில் அடங்காது புறம்பாகிய விஷயம் இவ்வுலகில் ஒன்றுமின்று என்பது எல்லார்க்கும் தெள்ளிதிற் றெரிந்ததே. எனவே, மானிடர்க்குறுதி பயக்கும் விஷயமென்று நூலாசிரியன் அறிந்து, தன் நூலின்கண் நுவலும் விஷயமே, தமிழிலக்கணத்திற் "பொருள்" எனப் புகலப்பெறுவதாகும்.

இன்னதன்மைத்தாகிய பொருள் இலக்கியத்துக்கு உயிர்போன்றது. மற்றை எழுத்து, சொல், யாப்பு, அணியிவை, புறவுறுப்புக்கள் போன்றன. யாங்ஙனமோ எனின், இலக்கியத்தின்கண், மற்றைய நான்கின் இலக்கணம் எத்துணைச் செவ்விபெறச் செறிந்திருப்பினும், 'பொருட்'சிறப்பு இல்லாக்கால் அவ்விலக்கியம் படிப்போர்க்குச் சிறிதும் பயனபடாதகலின் என்க.

பித்தனொருவன் பிதற்றுவனவற்றை ஏட்டின்கண் எழுதியெடுப்போமானல், அவற்றில், எழுத்தும் சொல்லும் காணப்படுதல் இயல்பே. கற்றுவல்லானொருவன், பித்துண்டு பிதற்றுவனேல், அவன் கூறுவனவற்றுள் யாப்பும் அணியும்இசைந்திருத்தலும் கூடும். அப்பித்தன் கூற்றுட் செம்பொருள் சிறிதும் இராதென்பது யாவர்க்கும்

தெரிந்த விஷயம். பொருட்பொருத்தமுற ஒருவன் பேசுவனேல், அவனும் பித்தனல்லன்; அவன் பேச்சும் பிதற்றுதலாகாது. ஆதலின் 'பொருள்' இன்றி எழுத்து ,சொல், யாப்பு, அணி இவை யியங்கின் அவற்றிற்குச் சிறப்புச் சிறிதும் இல்லை என்பது போதரும்.

இக்கருத்தினையே நாற்கவிராசநம்பி இயற்றிய 'அகப்பொருள் விளக்க'த்தின் பதிப்பாசிரியராகிய யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழை வித்துவான் சிவாநந்தையர் "எழுத்தும் சொல்லும், யாப்பும், அணியும், என நான்கும் தன்னைநோக்கிநிற்பத் தா னவற்றுள் ஒன்றையும் நோக்காது நிற்றலால், பொருளிலக்கணம் மற்றை நான்கினும் சிறப்புடைத்து" என்றும் "எக்காலத்தும், எவ்விடத்தும், யாவரானும், அறிந்து பயனெய்துதற்குரியதும், எய்தத்தகுவதும், எய்தவேண்டுவதும் எய்தப்படுவதும் பொருள் ஒன்றே பிறிதில்லை" என்றும் கூறிப்போந்தனர்.

மற்றும் கடைச்சங்கத்தார்காலத்தில் உக்கிரப்பெருவழுதி, தான் பஞ்சம்வந்தபோது கலைந்துபோகும்படி சொல்லியனுப்பிய புலவர்களை, அந்தப்பஞ்சம் நீங்கி நாடு நாடாகிய பின்னர் அழைத்துவரும்படி சில ஏவலாளரை அனுப்ப, அவரும் "எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக்கொணர்ந்து 'பொருளதிகாரம் வல்லாரை எங்குந்தலைப்பட்டிலேம்' என்று வந்தார். வர, அரசனும் புடைபடக்கவன்று எழுத்தும் சொல்லும் ஆராய்வது யாருளதிகாரத்தின் பொருட்டன்றே. பொருளதிகாரம் பெறேமே எனின், இவை பெற்றும் பெற்றிலேம்" எனச்சொல்லி வருந்தினன் என்பதும், பின்னர் ஆலவாயினவிர்சடைக்கடவுள் தம்பெயரால் அகப்பொருள் விஷயமாக, 'இறையனாரகப்பொருள்' என்னும் நூலை இயற்றியருளினர் என்பதும் அந்நூற்கு நக்கீரனார் 2000-ஆண்டுகட்குச் சற்று முன்பின் எழுதிவைத்த உரையானே உணரப்படும் இம்மேற்கோளானும் பொருளினது சிறப்பு அங்கையங்கனியென அறியக் கிடக்கின்றது.

இன்னும் தொல்காப்பிய அச்சுப்புத்தகத்தில் ஈற்றின்கண் தொல்காப்பியனார் துதியாகக் காணப்படும்.

"ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியனடி
பல்காற் பரவுது மெழுத்தோடு
சொல்கா மருபொருட் டொகைதிகழ் பொருட்டே"

என்னும் செய்யுளில், எழுத்தும் சொல்லும் ஓர் அடைமொழியும் பெருது வாளாநிற்ப, பொருள்மாத்திரம், அழகிய - விரும்பத்தக்க, என்னும் அர்த்தத்தையுடைய 'காமரு' என்னும் அருநயம் வாய்ந்த அடைமொழி பெற்றுநிற்கும் சிறப்பும் இங்கு நோக்கற்பாலது.

மற்றும், அணியினது சிறப்பை விளக்க ஒரு பழமொழியுண்டு; அஃது "அணியிலாக் கவிதை, பணியிலா வனிதை" என்பது. அணியில்லாக் கவியினை, ஆபரணங்களணிந்திராத அங்கனைக்கு நேர் எனக் கூறும் இம் முதுமொழிக்கிணங்க, பொருளிலாக்கவிதை, தெருளிலா வனிதை எனப் பொருளினது சிறப்பினை ஒரு புதுமொழியாற் புனைந்துரைத்தல் பொருத்தமுடைத்து. ஒரு பெண்ணுக்கு அறிவே, அணியினும் மிக வேண்டற்பாலது போல, செய்யுட்கு அணியினும் பொருளே மிகவும் இன்றியமையாததென்பது இவ் வுவமைமுகத்தானும் வலியுறுத்தப்பட்டது.

எனவே, 'பொருளிலார்க்கிவ்வுலகமில்' எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனுர் செல்வப்பொருளைக்குறித்துக்கூறியது, இங்குக் கல்விப்பொருட்கும் சாலவும் ஏற்புடைத்தாகின்றது.

இதுகாறுங் கூறியவாற்ருல், பொருளினதுசிறப்பு இத்தன்மைத்து என்பது கூறப்பெற்றது. இத்துணைச் சிறப்புவாய்ந்த பொருளினது இலக்கணத்தைக்குறித்து, ஆராயப்புகுமுன்னர், பொருட்கு இலக்கணவரையறை இன்றியமையாதுவேண்டற்பாலதா என்பதைக் குறித்துச் சற்றுவிவரிப்போம். இவ்வுலகின்கண் தான் மிக விரிவானதாயும் தன்னுட் பல பிரிவுகளுடைத்தாயும், அப்பிரிவுகள் தாமும் யாதொரு முறையுமின்றி, தாறுமாருய்க் கலந்திருக்கப் பெற்றதாயும், உள்ள ஒரு விஷயத்தினை, அங்ஙனமே கொண்டு, அதனுட் பொதிந்துள்ள நுணுக்கங்களை ஆராய்ந்து அறிவது எத்துணை அரியது என்பதையும், அவ்விஷயத்தையே அதனுட்பிரிவுகளுக்கேற்றவாறு அடைவுபடுத்துப் பின்னர் அதனை ஆராய்வுழி அம்

முயற்சி எவ்வளவு எளியது என்பதையும் நம்மிற் பலரும் அனுபவத்தில் அறிந்திருக்கிறோம். சாதாரணமாக ஒரு குடும்பத்தின் வரவு செலவு கணக்கைச் சரிவர வைத்துவரவேண்டுமானால், அதனை இன்ன இனங்களுக்கு, இன்ன நாட்களில் இன்ன இன்ன தொகை வரவென்றோ, செலவென்றோ, பேரேட்டில் வரைவதைப் பேரேட்டிலும் சிற்றேட்டில் வரைவதைச் சிற்றேட்டிலும் வரைந்துவந்தால், அக்கணக்கு யாவர்க்கும் எளிதில் விளங்கும். அதாவது இன்ன இன்ன லக்ஷணங்கள் அமையுமாறு நாம் கணக்கு வைக்கவேண்டுமென்னும் நோக்கம் நமக்கிருப்பின், அந்தக் கணக்குவேலை எளிதின் எழுதி முடிவதுடன், நமக்கு அது அடிக்கடி பெரும்பயனை விளைக்கும். அன்றி, எல்லாக் கணக்குகளையும் ஒன்றாய்ச்சேர்த்துக் குழப்பி எழுதிவைத்திருக்கும் ஒருவனுக்கு, அக்கணக்கினால் அசௌகரியமே நிரம்ப ஏற்படுகின்றது. இவ்வாறே மிகப்பரந்த அளவினையுடைய பொருட்கும் இலக்கணம் இன்றியமையாது வேண்டற்பாலதென, மேல்நோக்காக நோக்குவார்க்கும் வெளிப்படையாக விளங்கும். இந் நோக்கம் பற்றியே,தொல்காப்பியனார் முதலாயவரெல்லாம்பொருட்கு இலக்கணம் விரிவாக வகுத்துள்ளார்கள்.

அப்படியாயின் ஆங்கிலம்போன்ற, சிறப்புமிக்க நவீன பாஷைகட்குப் பொருளிலக்கணமில்லையே எனின், அவற்றின்கண் வெளிப்படையாகப் பொருட்கு இலக்கணம் வரையறுத்துக் கூறப்பெற்றிராவிடினும், நூனயம் உணர்ந்து நூற்றிறத்தினைப் பத்திரிகைவாயிலாகவும், தனிப்புத்தகவாயிலாகவும் வெளியிட்டுதவும் நுண்ணறிவுடையார் பலர் அந்நாடுகளிற் பல்கி இருக்கிறார்கள். அன்றியும் பொதுவாக எல்லா நூல்களும், சிறப்பாக நாடகநூல்களும் நூலாராய்ச்சித்திறத்திற் கைவந்துள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்களால் (censor of plays போன்றவர்கள்) சரியென ஒப்புக்கொள்ளப்படல் வேண்டும். அன்னோர் இந்நூல் கடியத்தகுவதெனக் கருதுவரேல், அந்நூல்பிரசுரம் பெறாதொழியும். இவற்றையெல்லாம் நோக்கின், கல்விநலங்கைவந்துள்ள நவீனநாகரிகநாடுகளிலும்,கல்விப்பொருட்கு ஓராற்றால் இலக்கணவரம்பு ஏற்பட்டே யுள்ளது என்பது போதரும்.

எனினும், உலகின்கண்ணே பழையனகழிதலும் புதியனபுகுதலும், மற்றை நான்கினைக்காட்டிலும் பொருளின்கண் மிகவும் சேர்தலால் எவராலும் பொருட்கு முடிந்த விலக்கணம் வகுத்தல் இயலாது. ஆழ்ந்து நோக்குமிடத்து, பொருளானது காலதேசவர்த்தமானங்களுக்கியைய மாறிவரும் இயற்கையுடைத்தாகலானும், புதிய அரசியல், நாகரீகவேறுபாடு முதலியவை காரணமாகப், பொருளின் தன்மை, மிக்கவேறுபாடுறுகின்றதாகலானும், எழுத்து, சொல், யாப்பு, அணி இவற்றிற்குப்போல இப் பொருளுக்கும் திட்டமாக இலக்கணவரம்பு பண்டைநூல்களில்ஏற்படுத்தியுள்ளார்என்பதுபற்றி அவ் விலக்கணங்களினின்றும் சிறிதும் பிறழாது நடத்தல் வேண்டுமென்பாருளரேல், அன்னார் கொள்கை அத்துணைச் சிறப்புடைத்தன்று. கடவுளால் தரப்பெற்ற இயற்கை யறிவையுடைய ஒரு புலவன் தன் மனத்தின்கட் டோன்றும் ஒரு விஷயத்தை இன்ன இன்ன இலக்கணவரைக் கிணங்கவே கூறவேண்டும் என வுரைப்பது அப் புலவனது மனோபாவத்திற்கு ஒரு தளையிடுவதுபோலாகும். ஆதலின் முன்னோர் கூறியுள்ள இலக்கணத்தை ஆராய்ந்து அதனின்றும் அக்காலத்து ஜனசமூகத்தினது அமைப்பு இன்னவாறு இருந்தது என்றும், மாந்தர்தம் நடையுடைபாவனைகள் இன்ன இன்ன என்றும், அரசியல் இவ்வண்ணம் நடைபெற்றது என்றும் அறிந்து கொள்வதே மிகவும் பொருத்தமுடைத்து.

பொருட் பாகுபாடு.

மேற்கூறியாங்கு மிக்கவிரிவினதாகிய பொருளுக்கு இலக்கணம்வகுக்கப்புகுந்தவர், தொடக்கத்திற்றானே அதனை அகப்பொருள் என்றும், புறப்பொருள் என்றும் இருவேறு பெரும்பிரிவு செய்தனர். இவ் வுலகத்தில் கல்விப்பொருளாயுள்ளது எதுவாயினும் அது புலவனது உள்ளத்தின்கண் நிகழும் உணர்ச்சியைக் குறித்தல் வேண்டும். அல்லாக்கால், அப் புலவன் தனது ஐம்பொறிகளான் உணர்ந்துகொள்ளக்கூடியதும், அவனுக்குப் புறத்தேயுள்ளதுமான ஒன்றைக் குறித்தல்வேண்டும். நமக்கு அகத்து நிகழ்வதும், புறத்து

நிகழ்வதும் ஆகியவற்றுள், இவ்வுலகத்திலுள்ள விஷயங்களெல்லாம் அடங்கிவிடுகின்றனவன்றோ? ஆதலின் இப்பாகுபாடு சாலவும் ஏற்புடைத்தாகும்.

இவற்றுள் அகப்பொருள் என்பது அகத்துநிகழும் ஒழுக்கத்தையும், புறப்பொருள் என்பது புறத்தே நிகழும் ஒழுக்கத்தையும் ஈரிடத்தும் ஆகுபெயராய் உணர்த்தாநிற்கும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப்பட்ட புருஷார்த்தங்களிற் சிறப்புப்பற்றி, காதலன் காதலிகளது அகத்து நிகழும் இன்பத்தினை அகப்பொருள் என்பது மிகப்பகுத்துரைக்கும்.

எல்லாமாந்தர்க்கும் பொதுவாகிய அறத்தினையும், (செல்வப்) பொருளினையும் விரித்துச்சொல்லும் புறப்பொருள் என்பது. வீட்டினைக்குறித்து விதந்துகூறுரோ எனின் நச்சினர்க்கினியரும், தொல்காப்பியத்திற் சிறப்புப்பாயிரவுரைக்கண்ணே "இனிப் பொருளென்பது யாதனையெனின், சொற்றொடர் கருவியாக உணரப்படும் அறம் பொருளின்பமும் அவற்றது நிலையும் நிலையாமையுமாகிய அறுவகைப் பொருளுமாம்." என்றும், "வீடுபேற்றிற்குநிமித்தங் கூறுதலன்றி வீட்டின் தன்மை அகத்தியனுரும் தொல்காப்பியனுரும் இலக்கணத்தாற் கூருரென்றுணர்க" என்றும் வரைந்துசென்றனர். திருகுறள், உரைமேதாவியாகிய பரிமேலழகரும் "வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லாநிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனைய மூன்றுமேயாம்" என்று கூறினர். இவ்விரு உரையாசிரியர் கருத்துக்கும் பொருத்தமாகவே, திருவள்ளுவநாயனுரும், தமது அருமைத்திருக்குறளின்கண்ணே, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பாலே முறையின் வகுத்து, வீட்டினியலை விரிக்காதுவிடுத்தனர். எனவே புறப்பொருள்

தானும் அறத்தினையும் பொருளையும் வெளிப்படையாகவும், வீட்டினைக் குறிப்பாகவும் உணர்த்துமென்பது பெற்றும். அகத்து நிகழும் இன்பங்களில், தலைவன் தலைவியர் உள்ளத்தில் நிகழுமின்பமே சிறப்புப்பற்றி அகம் எனப்பட்டதுபோல, புறவொழுக்கங்கள் பலவற்றிற்குக் காரணமானதும், அவற்றுளெல்லாம் சிறந்ததுமாகிற அரசர்களின் ஒழுக்கமே புறப்பொருளிற் பெரிதும் வழங்கும் இயல்பினையுடையதாய் இராநின்றது.

ஆங்கிலநூலாராய்ச்சியிற் கைதேர்ந்தவராகிய ஸ்டாப் போர்டு ப்ரூக்(Stopford Brooke) என்பவரும் தாம் இயற்றியுள்ள, 'ஆங்கில நூல்களின் வரலாறு' (A primer of English Literature)என்னும் புத்தகத்தில் பண்டைகாலத்து ஆங்கிலகாவியங்களிற் காணப்படும் பொருள் எல்லாம் காதலர்காதலும், வீரர்தம் போர்த்திறனுமேயாம் என்றனர். இக்கூற்றுத் தமிழ்ப்பொருளிலக்கணப் பாகுபாட்டிற்கிணங்கியிருத்தல்; எல்லாராலும் எளிதில் உணர்தற்பாலது.

அகத்திணைப் பாகுபாடு.

ஐவகை யிலக்கணங்களுட் பொருள் என்பது யாது? அது எத்துணைச் சிறப்புடைத்து? அது என்ன பாகுபாடுகளையுடையது என்பவற்றை இதுகாறும் கூறிப்போந்தோம். இனி அகம், புறம் என்னும் இருவகைப் பொருளுள் அகம் என்பதன் இலக்கணத்தையும், அதன் பிரிவாகிய ஏழ்திணைகளையும், அவற்றின் முதல், கரு, உரிப்பொருள்கள் யாவை என்பதையும் இங்கு எடுத்துக் கூறுவோம்.

"ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர்

பொருளாதலின் அதனை அகம் என்றார்" என நச்சினார்க்கினியர் கூறியுள்ளார்.

இத்தகைய சிறப்பில்வாய்ந்த அகப்பொருளினை, தமிழிலக் கணக்காரர்கள் ஏழ்திணைகளாகப் பிரித்தனர். அவையாவன:—கைக் கிளை, குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை என் பன. அவற்றுள்,

முதலாவதாகிய கைக்கிளை என்பதற்கு ஒருதலைக்காமம் என்பது பொருள். இதனை 'ஒருமருங்குபற்றிய கேண்மை' என்பர் நச்சினார்க் கினியர்.

"காமஞ்சாலா இளமை யோள் வயின்
ஏமஞ்சாலா இடும்பை யெய்தி
நன்மையும் தீமையு மென்றிரு திறத்தால்
தன்னொடு மவளொடுந் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புறல்
புல்லித் தோன்றல் கைக்கிளைக் குறிப்பே"

எனக் கைக்கிளைக் கிலக்கணம் வகுத்தனர் தொல்காப்பியர். எனவே காமவின்பத்தின்சிறப்பினை யுணரப்பெறாத ஒருசிறுமிமாட்டுக் காதல் கொண்டு, தன்குறிப்பினை யவள் அறியாதபோழ்தும், தானே தன் காதலைப்பற்றி மனத்தின்கண்ணே எப்போதும் நினைத்துக்கொண் டிருக்கும் ஒருவனது ஒழுக்கம் கைக்கிளையென்பது பெற்றும்.

இன்னும், "முன்னைய நான்கும் முன்னதற்கென்ப" என்னும் சூத்திரவுரைக்கண்ணே தலைவன் றலைவியையெதிர்ப்பட்டதுமுதல் நிகழும் "காட்சியு மையமுந் தெரிதலுந் தேறலுமென்ற குறிப்பு நான் கும்..........கைக்கிளையாதற்குறிய" என்றும், "இது தலைவிவேட் கைக்குறிப்புத் தன்மேல்நிகழ்வதனைத் தலைவன் அறிதற்கு முன்னே,

தன்காதன்மிகுதியாற் கூறுவனவாதலிற் கைக்கிளையாயிற்று. இது தலைவற்கேஉரியது' என்றும் நச்சினார்க்கினியர் கூறிச்சொல்வதனால், ஆண்பாற்கைக்கிளை யொன்றே தொல்காப்பியத்தானும் அதன் உரையானும் கொள்ளக்கிடக்கின்றது.

எனினும் புறப்பொருள்வெண்பாமாலை முதலிய பிற இலக்கண நூலார் பெண்பாற்கைக்கிளையுங் கொள்ளுவர். நளன் அழகை அன்னத்தாற் கேள்வியுற்று அவன்மாட்டு மிக்க அன்புடையாளாய், அவ்வன்னம் அவனிடம் சென்று திரும்பிவருங்காறும் வருந்திநின்ற தமயந்தியின் மனநிலை பெண்பாற்கைக்கிளை யென்பது, 'கைக்கிளைப் படலம்' என அதிவீரராமபாண்டியர் நைடதத்தில், அந்த இடத்துக்கு வைத்துள்ள பேரால், இனிது விளங்கும்.

எழ்திணைகளிலும் முதற்கட்கூறிய கைக்கிளை இத்தன்மைத்தாக ஈற்றின்கட் கூறிய பெருந்திணை யாதெனச் சற்றுவிசாரிப்பாம்.

"பெருந்திணையென்பது பொருந்தாக்காமம்" எனச் சூத்திரம் செய்தனர் நாற்கவிராசநம்பி.

"ஏறிய மடற்றிறம், இளமைதீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்ககாமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக்குறிப்பே" என்பது தொல்காப்பியம்.

"மடலேறுதலும்," தலைவற்கு ஒத்த பருவத்தளாதலும், "அறிவழிகுணனுடையளாதலும்," காமமிகுதியானே எதிர்ப்பட்டுழி வலிதிற் புணர்தலும் ஆகிய இந்நான்கும் கந்தருவத்துட் பட்டு வழிஇய என்றனர் உரையாசிரியர் நச்சினார்க்கினியர். மற்றும் பெருந்திணை என்பது பிற ஆறுதிணைகளும் எண்வகைமணங்களில் நான்கினையே கொள்ள, தான் ஒன்றுமாத்திரம் மற்றை நான்குமணத்தினையும்

பெற்று நடத்தலால் எல்லாவற்றுக்கும் பெரியதாகியதிணை என்னும் பொருளது என்றும் இத்திணைக்கு அவர் பெயர்க்காரணங் கூறுவர்.

கைக்கிளை, பெருந்திணை என்னும் இவ்விரண்டு திணைகளும் எஞ்சிய ஐந்துதிணைகளைப்போல அவ்வளவு சிறப்புடையன அல்ல. இதுபற்றியேபோலும், இறையனுர் அகப்பொருளில் முதற் சூத்திரத்தில் "அன்பின் ஐந்திணை" என நடுவண் உள்ள ஐந்திணைகளே குறிக்கப்பட்டிருக்கின்றன. அந்நூலில் ஆசிரியர் கைக்கிளை பெருந்திணை இவற்றைப்பற்றி வெளிப்படையாகக் கூறுது விடுத்தனர். மற்றும் இவற்றிற்கு எஞ்சிய ஐந்திணைகளைப்போல முதலும், கருவும் உரியும் இல்லாது போனதும் இவற்றின் சிறப்பின்மையைத் தெரிவிக்கும். இனி இவ் எஞ்சிய ஐந்திணைகளையும் பற்றிச் சற்று விவரிப்பாம்.

இவ்வைந்திணைகள் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்பவை. இவற்றுட் குறிஞ்சி என்பது மலையும், மலைசார்ந்த இடமும். முல்லை என்பது காடும், காடுசேர்ந்த இடமும். பாலை என்பது சுரமும், சுரஞ்சேர்ந்த இடமும். மருதம் என்பது பழனமும், அதுசேர்ந்த இடமும். நெய்தல் என்பது கடலும், கடல் சேர்ந்த இடமும்.

இவ்வுலகத்திலுள்ள நிலப்பரப்பு யாதாயினும் இவ்வைந்து பிரிவுகளுள் ஒன்றற்குள் அடங்குதல்வேண்டும். இவ்வைந்திற்கும் புறம்பாகிய நிலம் யாண்டும் இலது என்பது பூகோளத்தின் நிலப்பரப்பின் இயற்கை அமைப்பினை உற்றுநோக்கினேர்க்கெல்லாம் தெற்றெனத் தெரிந்த விஷயமே. இவ்வைந்தனுள் பாலைநிலம் மாந்தர்க்குப் பயன்படாமைபற்றியும், நம் தமிழ்நாட்டிற் பாலைநிலப்பரப்பு விசேஷித்துக் காணப்படாமைபற்றியும் அதனைப் பெரும்பாலும் விடுத்து, மற்றை நான்கையும் தழுவிச் செல்லுதல் நூன்மரபு. நால்வகைப்பட்ட நிலங்கள் என்னும் பொருளில்வரும் 'நானிலம்' என்

னும் தொடர்மொழி, தமிழ்நூல்களிற் பெரிதும்வழங்குவது இதனையே நன்குவிளக்கும். மேலும் தொல்காப்பியனாரும்,

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையிற் சொல்லவும் படுமே."

என்று பாலையை நீக்கியே சூத்திரம் செய்தார். எனினும், பாலைக்கு நிலமேயில்லை என்று கொள்ளாது, அது மற்றை நால்வகை நிலத்திற்கும் உரியதென்றே கொள்ளல் வேண்டும் என்பது ஆசிரியர் கருத்து. சிலப்பதிகாரத்தில், மதுரைக்காண்டம், காடுகாண்காதையில் வரும்,

"முல்லையுங்குறிஞ்சியும்முறைமையிற்றிரிந்து
நல்லியல்பழிந்துநடுங்குதுயருறுத்தும்
பாலையென்பதோர்படிவங்கொள்ளும்"

என்பதனால் குறிஞ்சியிலும் முல்லையிலும் பாலை வந்தமை தெரிக்கப்பட்டது. மதுரைக்காஞ்சியில்,

"நிழலுருவிழந்தவேனிற்குன்றத்துப்
பாலைசான்றசுரஞ்சேர்ந்தொருசார்".

என்பதிலும் குறிஞ்சியிற் பாலைவந்தது காண்க.

இங்ஙனம் குறிஞ்சியே, முல்லையே, பாலையே, மருதமே, நெய்தலே என நிலத்தினைப் பாகுபாடுசெய்தது இயற்கையமைப்புக்கு மாறுதிருத்தல் முன்னரே கூறப்பட்டது. அதனைத் தொல்காப்பியனாரும்,

"அவற்றுள்,

நடுவ ணைந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே."

என்னுஞ் சூத்திரத்தாற் கூறினர். இதனுள்ளும் நடுவதாகிய பாலை ஒழிக்கப்பட்டது நோக்கற்பாலது.

குறிஞ்சிமுதலியபெயர்கள், நிலப்பெயர் ஆகுங்கால், அவ்வவ் நிலங்களிற் சிறப்பாகவுள்ள பொருள்களின் பெயரே அந்நிலங்களுக்கு ஆகுபெயராய், ஆயினபோலும் என ஊகித்தற்கு இடந்தருகின்றது. முல்லையும் மருதமும் நெய்தலும் முறையே அப் பெயரிய நிலங்களிற் பெரும்பாலுங் காணப்படுகின்றன என்பது யாவரும் அறிந்த விஷயம். அதுபோலக் குறிஞ்சி என்பதும், பாலை என்பதும் தத்தமக்குரிய நிலங்களில் வளரும் செடி என்பதை நம்மிற்சில அனுபவத்தில் அறிந்திராவிடினும், * "கருங்கோற்குறிஞ்சிப்பூக்கொண்டு பெருந்தேனிரைக்கும்" எனவும், * "கோடுறு பால்காய் வானார்ப் பாலை" எனவும் வரும் பழையசெய்யுட்களால் அதனை அறிந்து அமைத்துக் கொள்ளலே சால்புடைத்து. இங்ஙனம் ஐவகை பாகுபாடுபெற்ற நிலப்பெயர்க் கியையவே, அப் பெயராலேயே வங்கும் ஐவகை ஒழுக்கத்தினைக் கூறினர். இவ்வைந்திணையினையே 'அன்பின் ஐந்திணை" என இறையனாரும், "ஐந்திணை என்பது அன்புடைக்காமம்" என அகப்பொருள்விளக்கமுடையாரும் கூறினர். ஆதலின் எழுதிணைகளிலும், இவ்வைந்தே தலைவன் தலைவியர் உள்ளத்தே நிகழும் அன்பினை விலக்கிச்செல்வன என்பதும், அதுபற்றியே, முன்னர்ப்பிரிதோரிடத்திற் கூறியாங்கு, மற்றைக்கைக்கிளை, பெருந்திணை யிரண்டும் இவற்றிற் குறைந்த சிறப்பினையேயுடைய என்பதும் பெற்றாம்.

இனிக் குறிஞ்சிமுதலிய பெயர்கள், நிலத்திற்காம்போது ஆகுபெயராய்ப் பொருள்விளக்கமுற அமைந்திருக்கின்றன எனினும், அவைதாமே, அகத்து நிகழும் ஒழுக்கங்கட்குப் போயவழி, அச்சொற்களுக்குப் பெயர்க்காரணம் கூறுவது, அத்துணை எளிதாகத் தோற்றவில்லை. இவை பண்டைக்காலந்தொட்டே இவ் வொழுக்கங்கட்கு பெயராய் வருகின்றமையின், இவற்றை இடுகுறியென்னலே ஏற்புடைத் தென்பர் சிலர். மற்றும் சிலர் அகத்தின்கண் காம

* மேற்கோள் ஈரிடத்தும் நம்பியகப்பொருள் உரையின்கண்ணே கண்டது.

இன்பம் நிகழும் ஒழுக்கங்களிற் சிறந்தனவாகிய புணர்தலும், பிரிதலும் (பிரிவாற்றி) இருத்தலும், (பிரிவாற்ருது) இரங்கலும், ஊடலும் ஆகிய இவ்வைந்தும் செவ்விபெற நிகழ்தற்குத் தக்க நிலங்கள் ற்றுநோக்கின் முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் இவையாதலின் இவ்வைந் தொழுக்கங்களும் நிகழ்தற்குத் தக்கசிறப்பினையுடைய நிலங்களின் பெயரையே இவ்வொழுக்கங்களுக்கும், ஆகுபெயராக்கிக்கொண்டு அகத்திணை ஐந்தும் வகுத்தர் எனக்கூறுதல் ஒருவாறு பொருத்தமுடைத்தேயாம் என்பர்.

இ இவ்வைந்திணைகளில் ஒவ்வொன்றிற்கும் ஆசிரியர் கூறும் முதற்பொருள், கருப்பொருள் இவை இவை எனக் கூறுகின்ருர். அவற்றையெல்லாம் இங்கோர் அட்டவணையிற் சுருக்கமும் விளக்கமுமுறச் சேர்த்துக் காட்டுவோம். அவ் அட்டவணையைச் சேர்ப்பதன் முன்னர், முதல், கரு, உரி என்பன யாவை என்பது கூறல் அவசியமாகின்றது. அவற்றுள்,

முதல் என்பது நிலமும், பொழுதும்; நிலம் முற்கூறப்பெற்ற குறிஞ்சி முதலிய ஐந்துமே; பொழுதுதானும் பெரும்பொழுது சிறுபொழுது என இருவகைத்து. ஆண்டினை ஆறுகூறு செய்து, ஒவ்வொருபாகத்திலும் உள்ள இரண்டுமாதத்தினையும் ஆவணிமாதந் தொடங்கிக் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் எனப் பேரிட்டனர். இவ்வாறும் பெரும்பொழுதாம். நாளினை ஆறுகூறுசெய்து ஒவ்வொருகூற்றினுமுள்ள பத்துநாழிகைநேரத்திற்கும் ஞாயிறுதோன்றுநேரமுதலாகத்தொடங்கிக் காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை எனப் பேரிட்டனர். இவ்வாறுஞ் சிறுபொழுதாம்.

கரு என்பது தெய்வம், உணவு, மனிதர், விலங்கு, பறவை முதலியன.

உரி என்பது அவ்வத்திணைக்குரிய எனக் கூறப்பட்ட, புணர்தல் பிரிதல், (ஆற்றி) இருத்தல், (ஆற்ருது) இரங்கல், ஊடல் என்னும் சிறப்பொழுக்கங்கள். இனி மேற்கூறிய அட்டவணை வருமாறு:—

முன்காட்டிய விவரங்களை யுற்றுநோக்குவார்க்கு அவ்வவ் நிலங்களுக்குத்தகுந்த கருப்பொருளை விரித்துக்கூறியிருப்பது பண்டைத் தமிழ்ப்புலவர்கள், தமக்குப் புறம்பாயுள்ளவற்றையெல்லாம் செவ்வனேநோக்கி, அவற்றை ஒவ்வோரியைபுபற்றிப் 'பற்பலபிரிவுகளாகப் பிரித்து முறைப்படுத்துவதில் ஆற்றவும் ஆற்றல்வாய்ந்தவர் என்பதற்குப் போதியசான்ருகும்.

இவற்றுட் கருப்பொருள்விளக்கமொன்றே, ஒருவாறு தாவரநூல் (Botany) விலங்கியல்நூல் (Zoology) பௌதிகநூல் (Geography) ஜனசமூக அமைப்புநூல் (Sociology) முதலிய இக்காலத்து மேனுட்டாராற் போற்றப்பெற்றுவரும் சாஸ்திரங்களில் ஸ்தூலமாகக்காணப்படும்பொருள்களை நம் தமிழ்ப்புலவர்கள் அறியாதவர் அல்லர் என்பதனை நிலைநாட்டும்.

இனி இவ்வகத்திணைகட்கும்,அவற்றுக்குரிய எனக் கூறப்பட்ட பெரும்பொழுது சிறுபொழுதுகட்கும் உள்ள இயைபினைச் சிறிது நோக்குவாம்.

குறிஞ்சிக்குக் கூதிரும், யாமமும் கூறியது எற்றிற்கோ எனின், குறிஞ்சி, புணர்ச்சிக்குத்திணை. களவில் தலைவியோடு புணர்ச்சி நிகழ்த்தும் தலைமகனுக்கு, அத்தலைவி எவ்வளவுக்கெவ்வளவு அரியளாகின்றுளோ அவ்வளவுக்கவ்வளவு புணர்ச்சியின்பஞ் சிறக்குமாதலானும், தலைவியினது அருமையினை இருள், மழை யிவற்றூற் களவின்கண்ணே தலைமகற்குப் புலப்படுத்துவது, ஐப்பசியும் கார்த்திகையுமாகிய கூதிர்காலமும் அதன் இடையாமமுமே ஆகலானும் கூதிரும் யாமமும் குறிஞ்சிக்குப் பொழுதாயின. முன்பனிக்காலமாகிய மார்கழியும் அத்துணைச்சிறப்பில்லாதது எனினும், பொருத்தமுடைமைபற்றி முன்பனியும் பின்னர்ச்சேர்க்கப்பட்டது. இங்ஙனமே மற்றைப் பொழுதுபாகுபாடுகள் அவ்வத்திணைகளுக்கு மிகவும் ஏற்புடைத்தாமாறு கற்றேரால் உற்றுநோக்கி உணரற்பாலது.

இத்துணை இயைபுபெறத் திணைகட்கு முதல், கரு, உரிப் பொருள்கள் கூறிவைத்தாரெனினும், இந்த வரையறைக்குட்பட்டே

இலக்கியம் இயங்கவேண்டுமென்பது ஆசிரியர்கருத்தன்று. அவர் பிறஇடங்களிற்போலவே இங்கும், காப்பியப்புலவனது முயற்சி எளிதிற் கைகூடும்படி இலக்கணமுறுக்கினை இளக்கிக்கொடுத்திருக் கின்றார். எங்ஙனமோ எனின், திணைகள் தம்முள்ளும் தமது உரிப் பொருளல்லாத மற்றைப்பொருட்களுள்ளும் மயங்கிவருதல் அமை வுடைத்து என்பதனை,

"திணைமயக்குறுதலுங்கடிநிலையிலவே"

"உரிப்பொருளல்லனமயங்கவும்பெறுமே"

"எந்நிலமருங்கிற்பூவும்புள்ளும்
அந்நிலம்பொழுதொடுவாராவாயினும்
வந்தநிலத்தின்பயத்தவாகும்"

என்னும் புறனடைச்சூத்திரங்களிற் சொல்லிப்போந்தனர்.

இவ்வாறு திணைகள் தம்முள் மயங்குதற்குச்செய்யுள், தமி ழிலக்கியத்திற் பல எளிதிற்காணப்படும். சூத்திரவுரையின்கண்ணே நச்சினார்க்கினியரும் எத்துணையோ மேற்கோள்கள் சங்கமரீஇய நூல்களிலிருந்து எடுத்துக்காட்டியுள்ளார். யாமும் அவராற் கூறப் பெற்றனவாகிய இரண்டொருசெய்யுட்களை இங்கு எடுத்துக்காட்டு வது பொருத்தமுடைத்தெனக்கருதி அவற்றைக் கீழேதருகின் றோம். சீவகசிந்தாமணி நாமகளிலம்பகத்தின்,

"மூலைத்தடஞ்சேதகம்பொறிப்பமற்றவர்
குலைத்துடன்பதித்தலிற்குதித்தவாட்கயல்
புலத்திடைக்கவரிகன்றூட்டப்போந்தபால்
நிலத்திடைப்பாய்ந்தவைபிறழுநீரவே"

என்பதில் மருதமும், முல்லையும் மயங்கியுள்ளமையும்,

"பாற்சுவையறிந்தவைபழனத்தாமரை
மேற்செலப்பாய்தலின்வெரீஇயவண்டினம்
தோற்றுடிநுளைச்சியர்முத்தங்கோப்பவர்
ஏற்றியமாலைத்தேனிரியப்பாய்ந்தவே."

என்பதில் முல்லையும், மருதமும், நெய்தலும் மயங்கியமையும், பத்துப் பாட்டில், குறிஞ்சிப்பாட்டின்கண்ணே,

"சினைஇயவேந்தன்செல்சமங்கடுப்பத்
துனைஇயமாலைதுன்னுதல்காணூஉ"

எனக் குறிஞ்சிக்குப்பொழுதல்லாத மாலைப்பொழுது மயங்கிவந்ததும், மேற்கூறிய தொல்காப்பியச்சூத்திரங்களுக் குதாரணமாகும்.

அகத்திணைப்பாகுபாட்டினையும், அவற்றின் பொருள்களையும், அவற்றோடியைபுபெற்ற மற்றும் பிறவற்றையும் சிறிதுவிரிவாக இதுகாறுங் கூறினோம்; அது எதற்கோ எனின், சங்கச்செய்யுட்களில் யாண்டும், இத்திணையும் பிறவும் பெரிதும் பயில்வன ஆகலானும், ஐங்குறுநூறு, கலித்தொகை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை முதலாய இந்நூல்களெல்லாம் ஐந்திணைமுதலியவற்றில் ஐயந்திரிபறப் பழகியிருந்தாலன்றிப் படிப்பார்க்குப் பொருள் நயம் தோன்றாவாகலானும் என்க.

இனி அகத்தின் இருபிரிவாகிய களவொழுக்கம், கற்பொழுக்கம் என்பவற்றுள், களவொழுக்கத்தினது இலக்கணமும், அவ்விலக்கணத்தால் அறியப்படுவனவும் கூறப்படும்.

களவொழுக்கம்.

——:o:——

களவொழுக்கம் என்பது பிறப்பு, கல்வி, அன்பு முதலியவற்றால் ஒத்த தலைவன் தலைவியர், தம்முயற்சியாலன்றி, தெய்வசங்கற்பத்தால் எதிர்ப்பட்டு ஒருவர்மாட்டொருவர்க்குத் தம்மையறியாதெழுந்த வேட்கைமிகுதியால், தம்முட் கூடிக்கலப்பது. இதனை யாழோர் கூட்டம் என்றுங் கூறுவர். வடநூலார் இவ்வொழுக்கத்தினைக் காந்தர்வமென்பர். "கந்தர்வவழக்கம் என்பது, கந்தருவரென்பார் ஈண்டுச்செய்த நல்வினைப்பயத்தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாருமின்றி, இருவரும் ஒருபொழிலகத்து எதிர்ப்பட்டுப் புணர்வது. அதுபோன்ற கூட்டத்தினைத் தமிழர் களவொழுக்கம் என்பர்" என்று இறையனாரகப்பொருளுரையின்கண்ணே நக்கீரனார் கூறியுள்ளார்.

காட்டில் வேட்டையாடச்சென்ற துஷ்யந்தமஹாராஜன், வழி தவறிக் கண்வமுனிவரது ஆச்ரமத்தினருகேவர, அங்கு அப்போது அவனைச் சகுந்தலை எதிர்ப்பட, அவ்விருவரும் தம்முண் மனமொத்துக்கூடினர் என்பதும், அம்மணத்தினைக் கண்வமுனிவர் கடியாது, நேரிதெனக்கொண்டார் என்பதும் சாகுந்தலநாடகத்திற் காணப்படுகின்றன.

இக்காலத்து நம்நாட்டில், இவ்வொழுக்கம் பற்பல இடையூறுகளால் நிகழாதொழிந்தது எனினும், நவீனநாகரிகம்வாய்க்கப்பெற்றுள்ள மேனாட்டார் இவ்வொழுக்கத்தை இப்போதும் அனுசரித்து வருகிறார்கள். பண்டைக்காலத்தில் "பொய்யும் வழுவும்" இப்போதைப் போல, அத்துணை அதிகமாக இல்லாமையால், களவொழுக்கம் அக்காலத்து நிகழ்ந்துவந்தது. அதன்கண் இயல்பாகவே யமைந்துள்ள சிறப்புப்பற்றி, வடமொழியிற் சாஸ்திரநூல்களிலும், தமிழில் இலக்கணநூல்களிலும் இம்மணத்தின் இயலெல்லாம் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. துஷ்யந்தனும் சகுந்தலையும் மணந்தது முன்னரே கூறினோம்.

சூர்ப்பணகை இராமபிரான்மீது காதல்கொண்டு அவரைத் தன்னை மணக்கும்படிவேண்டிக்கொள்ளுஞ் சமயத்தில் இம்பர்நாடெலாம் பம்புபுகழ்படைத்த கம்பநாடரும்,

> "காந்தர்ப்பமென்பதுண்டாற்காதலிற்கலந்தசிந்தை
> மாந்தர்க்குமடந்தைமார்க்குமறைகளேவகுத்தகூட்டம்"

எனக் கூறியிருக்கிறார்.

அருச்சுனன் தீர்த்தயாத்திரைக்குச் சென்றபோது பாண்டியன் மகளாகிய சித்திராங்கதையை "ஒரு சண்பகத்தின் பூந்தண்ணீழலில்" எதிர்ப்பட்டு,

> "செந்திருவையனையாளுந்திருமாலையனையானுஞ்சிந்தையொன்றாய்
> வந்திருவர்விலோசனமுந்தடையின்றியுறவாடிமகிழ்ச்சிகூர்ந்து
> வெந்துருவமிழந்தமதன்மீளவும்வந்திரதியுடன்மேவுமாபோற்
> கந்தருவமுறைமையினாற்கடவுளர்க்குங்கிடையாதகாமந்துய்த்தார்"

என வில்லிபுத்தூராரும் கூறியிருக்கிறார்.

பிறப்பு, கல்வி, அன்பு இவற்ருல் ஒத்த தலைவன் தலைவியர் தாம் ஒருவரை யொருவர் கண்டபோதே காதல்கொண்டு சேர்ந்து துய்க்கும்(காந்தருவமணத்தின்) இன்பத்துக்குநேராக மற்றை பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்னும் எழுவகைமணத்தின்கண்ணும் நிகழும் இன்பத்தினைக் கூறுதல் ஒவ்வாது. ஏனெனில், பிரமம் என்பது நாற்பத்தெட்டு வருஷம் பிரமசரியங்காத்தானுக்குப்பன்னீராட்டைப்பிராயத்தாளை அணிகலனணிந்து கொடுப்பது; பிரசாபத்தியம் என்பது மைத்துனகோத்திரத்தான் மகள்வேண்டின் மறுது அவனுக்கு மகட்கொடுப்பது; ஆரிடம் என்பது காளையையும், பசுவையும் அலங்கரித்து அவற்றிடையே மகளை நீரிற்கொடுப்பது; தெய்வம் என்பது வேள்வியாசிரியனுக்கு வேள்வித்தீமுன்னர் மகளைக்கொடுப்பது; அசுரம் என்பது முற்குறித்துள்ள சங்கேதப்படி கொல்லேறுதழுவியோ, வில்லேற்றியோ மகட்பெறுவது; இராக்கதம் என்பது பெண்ணினைப் பெற்ருேரிடத்தும் அவளிடத்தும் அனுமதிபெருது வலிந்துகொள்வது; பைசாசம் என்பது தனக்குமேற்பட்ட வயதினையுடையவள், தூங்குகின்றவள் இவர்களுடன் சேர்வது; எனவே இவ்வேழு மணங்களில் ஒன்றிலேனும், தலைவன் தலைவியர் இருவர் மனமும், மன்றல்நிகழ்வதற்குமுன் ஒத்திருந்தது என ஒருதலையாகக் கொள்வதற்கு ஆதாரம் இல்லையாதலின். மணமக்கள் தம்முடைய மனநிலையுணர்ந்தே மணவினை நிகழ்த்துதல் மற்றையவாகிய மணத்தைக்காட்டிலும் மாண்புடையதன்ருே?

கந்தர்வமணத்தின்சிறப்பு இம்மட்டோ. தமிழ்ப்புலவர்கள், தாம் கடவுளர்மீது தோத்திரமாகப்பாடும் பிரபந்தங்களில் தமது "உள்ளங்கவர்ந்தெழுந்தோங்கும்" பக்தியினைத் தலைவன் தலைவியாது உள்ளத்தில்நிகழும் அன்புவாயிலாக வெளியிட்டிருக்கிருர்கள். கடவுளைத் தலைவராகவும், தம்மைத் தலைவியாகவும், பாவித்து அவர்கள் பாடியுள்ள நூல்கள் பல. அவற்றுள், மாணிக்கவாசகப்பெருமான் இயற்றிய திருச்சிற்றம்பலக்கோவையாரும், நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தமும், முறையே சைவர்களாலும் வைணவர்களாலும் மிகச் சிறந்தனவென்று பாராட்டப்படுகின்றன.

எனவே, களவொழுக்கத்தின்கண்ணே நாயகன் நாயகி இவர்கள் உள்ளத்தேநிகழும் உழுவலன்பின் உயர்ச்சி கூறியதாயிற்று.

இதுகாறும் களவொழுக்கத்தின் சிறப்புக் கூறப்பட்டது. இனி அதன் இலக்கணங்களைச் சிறிது எடுத்தியம்புவாம்.

முதற்கண் இக் களவொழுக்கத்திற்குத் தலைவனுந் தலைவியும் இன்றியமையாது வேண்டும்; பாங்கன், பாங்கி, செவிலி, நற்றாய் முதலியவர்களைப்பற்றி ஆங்காங்கு வேண்டப்படுமிடத்துக் கூறு வோம்.

தலைவன் பெருந்தன்மைக்குணமும், மனத்திட்பமும் வாய்க்கப் பெற்றவனாதல் வேண்டும். "பெருமையுமுரனும் ஆடூஉமேன" என்பர் தொல்காப்பியர். பெருமைக்குணம் என்பது "அறிவும், ஆற்றலும், புகழும், கொடையும், ஆராய்தலும், பண்பும், நண்பும், பழிபாவம் அஞ்சுதலும் முதலிய" பகுதிகளுடையது எனவும், மனத்திட்பம் என்பது "கடைப்பிடியும், நிறையும், கலங்காதுதுணிதலும் முதலிய" பகுதிகளுடையது எனவும் நச்சினார்க்கினியர் விரித்துரைத்தனர்.

தலைவியோ அச்சமும், நாணமும், மடமும், பயிர்ப்பும், நிறையும் வாய்ந்திருத்தல் வேண்டும்.

"அச்சமுநாணுமடனுமுந்துறுத்த
நிச்சமும்பெண்பாற்குரியவென்ப"

என்பது தொல்காப்பியச்சூத்திரம்.

இத்தகைய இலக்கணம் வாய்க்கப்பெறாத தலைவனும், தலைவியும் கூடுங் களவொழுக்கத்தின்கண் இன்பம் சிறவாதென்பது வெளிப் படை.

இங்ஙனம் தலைவன் தலைவியர்க்கு இலக்கணம்வகுத்தவர், அவர் கள் இன்னவருணத்தாராயிருத்தல்வேண்டுமென்பது கூறிலர். ஆத லின் அது எல்லாவருணத்தார்க்கும் பொது எனக் கொள்ளல்வேண் டும். தொல்காப்பியம் 'களவியல்' முதற்சூத்திரவுரைக்கண்ணே "களவொழுக்கம் பொதுவாதலின் நான்குவருணத்தார்க்கும் ஆயர்

முதலியோர்க்கும் உரித்து" என அந்தணர்குலத்திற் பாரத்துவாச கோத்திரத்திற் பிறந்தவராகிய நச்சினார்க்கினியர் கூறியிருப்பது கவனிக்கற்பாலது. இனி,

*"ஒத்தகிழவனுங்கிழத்தியுங்காண்ப
மிக்கோனாயினுங்கடிவரையின்றே"

என்பது இலக்கணமாதலால் உயர்ந்தவருணத்தோர் தாழ்ந்தவருணத்துப்பெண்ணைக் கந்தருவமணஞ் செய்துகொள்ளலாம் என்பதும், தாழ்ந்தவருணத்தோர் உயர்ந்தவருணத்துப்பெண்ணைக் கொள்ளுதல் பொருந்தாது என்பதும் போதரும்.

இத்தகைய தலைவனும் தலைவியும் ஒருவரை யொருவர்கண்டவுடனே காதல்கொண்டு உள்ளமுடைதல் சிறப்புடைத்து. இங்ஙனம் கண்ட அப்பொழுதே இராமபிரானும் சீதாபிராட்டியும் ஒருவர் மீது ஒருவர் ஆராக்காதல்கொண்டார் என்பதைக் கம்பநாட்டாழ்வார்,

"எண்ணருநலத்தினாளிணையள்நின் றுழிக்
கண்ணொடுகண்ணிணைகௌவியொன்றையொன்
றுண்ணவுநிலைபெறா துணர்வுமொன்றிட
வண்ணலுநோக்கினானவளுநோக்கினாள்."

"நோக்கியநோக்கெனு நுதிகொள்வேலிணை
யாக்கியமதுகையான்றோளினாழ்ந்தன
வீக்கியகனைகழல்வீரன் செங்கணுந்
தாக்கணங்கனையவடனத்திற்றைத்தவே."

"பருகியநோக்கெனும்பாசத்தாற்பிணித்
தொருவரையொருவர்தமுள்ளமீர்த்தலால்
வரிசிலையண்ணலும்வாட்கணங்கையு
மிருவருமாறிப்புக்கிதயமெய்தினார்."

என மிக அழகாகப் பாடியுள்ளார். திருவள்ளுவனாரும்,

* தொல்காப்பியம்: களவியல்.

"கண்களவுகொள்ளுஞ்சிறுநோக்கங்காமத்திற்
செம்பாகமன்றுபெரிது."

"கண்ணொடுகண்ணிணைநோக்கொக்கின்வாய்ச்சொற்கள்
என்னபயனுமில."

எனக் கூறினர். இன்னும், இவற்றுக்கியையவே,

"நாட்டமிரண்டுமறிவுடம்படுத்தற்குக்
கூட்டியுரைக்குங்குறிப்புரையாகும்"

எனத் தொல்காப்பியத்திலும்,

"அரிவைநாட்டமகத்துநிகழ்வேட்கை
தெரியவுணர்த்துங்குரிசிற்கென்ப"

என நம்பியகப்பொருளிலும் இலக்கணம் எழுந்ததும் இங்கு நோக்கற்பாலது.

அன்றியும், ஆங்கிலத்திற் பழையநாடகாசிரியராகிய கிரிஸ்டவர் மார்லோ (Christopher Marlowe) என்பவரால், தமது நாடகம் ஒன்றன்கண்ணே வரையப்பெற்ற, "who hath loved, that loved not at first sight" என்னும் வாக்கியம், உலகெலாம் புகழும் அலகிலாக்கீர்த்திவாய்ந்த ஷேக்ஸ்பியர் (Shakespeare) என்பவரால், அவரியற்றிய நாடகமொன்றில் மேற்கோளாகக் கொள்ளப்பட்டுச் சிறப்புற்றிருக்கிறது. அதனை இக்காலத்துத் தமிழ்ப்புலவர் ஒருவர் "கண்டவக்கணத்திலேகாதல்கொண்டிடா, எண்டகுகாதலர்யாவராபவோ ?" எனத் தமிழில் மொழிபெயர்த்துத் தாமெழுதியதொரு புத்தகத்திற் சேர்த்திருக்கிறார்.

இங்ஙனம்"காதலிருவர்கருத்தொருமித் தாதரவுபட்டு"ஒருவர்மீதொருவர் வேட்கைநோக்கு நோக்கியபோதே, உள்ளத்தாற் புணர்ச்சி நிகழ்ந்ததாயிற்று. ஆதலின் இவர்கண்மாட்டு மெய்யுறுபுணர்ச்சி நிகழினும், நிகழாமற்போயினும் முன்னிகழ்ந்த உள்ளப்புணர்ச்சியும் கந்தருவமாம் என்பது, நச்சினார்க்கினியர் "அச்சமு நாணும்" என்னுஞ் சூத்திரவுரைக்கண்ணே "இருவர் கண்ணுற்றுக் காதல்கூர்ந்த

172203

வழியெல்லாம் கந்தருவமென்பது வேதமுடிபாதலின், இவ் வுள்ளப் புணர்ச்சியும் கந்தருவமாம் எனக் கூறியதனுற் போதரும்.

இப்படித் தெய்வசங்கற்பத்தால், தலைவியை எதிர்ப்பட்டுப் புணர்ந்த தலைவன், அவளைப்பிரிந்துபோகும்போதும், பின்னரும் அத் தலைவன்தலைவியரது மனநிலையையும் செய்கைகளையுந் தொல்காப் பியனுர் விரித்துரைக்கின்றூர். தலைமகன் பிரியும்போது தன் அன் பின்மிகுதியைத் தலைவிக்குக்காட்டுமாறு, "கருங்குழற்கற்றை மருங்குற இருத்தி, அளகமுநுதலுந் தகைபெறநீவி, ஆகமுந் தோளும் அணிபெறத்தைவந்து, குளிர்ப்பக்கூறித் தளிர்ப்பமுயங் கிப்பிரிவல்" என இறையனுரகப்பொருளில் மிக்கநயமுறக்கூறப் பெற்றுளது. இத்தன்மையனுய்ப்பிரிந்த தலைவன் பின்னர்ப் பாங்கன், தன்னிடத்து வேறுபாடுகண்டு யாதெனவினவத் தான் நடந்தது கூறலும், பின் தழை * யும், கண்ணியும் முதலிய கையுறைகொண்டு, தோழியிடத்துத் தனது குறையிரத்தலும், தொழி தலைவிமாட்டுக் குறைவேண்டலும், தோழி அதற்கிணங்கலும், பின்னர்ப் பகற்குறி, இரவுக்குறி இவற்றின்கண்ணே தலைவன் தலைவியர் கூடலும், தோழி வரைவுகடாவுதலும், தலைவன் வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதலும், அன்றி அலர்மொழிவெளிப்படத் தலைவியுடன் வெஞ் சுரத்துநெறியே ஏகுதலும், தோழிமுதலியோர் தக்ககாரணங் கொண்டு செவிலிமுதலியோர்க்கு முறையே அறத்தொடுநிற்றலும் பிறவுமாகிய எல்லாம் இயற்கைப்புணர்ச்சியின்பின்னர் நிகழும் செயல்களாம்.

தோழி எனப்படுபவள் செவிலித்தாயினது மகளாய்த் தலைவி யுடன் இளமைதொட்டே உடனுறைந்துவரும் பாங்கியாவாள். அவள் தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினைமறைத்தல் முதலிய இவற் ருற் கந்தருவமணஞ்செய்துவந்த தன் தலைவியிடத்து வேறுபா டுணருவள். இங்ஙனம், இதனை முன்னுறவுணர்ந்த தொழிமாட்டுத் தழையும் கண்ணியுங்கொண்டு தலைவன் வந்து தன்குறையிரப்ப,

---

* தழை என்பது இலை, பூ முதலியவற்ருல் தொடுத்துப் பண்டைக் காலத்து இளம்பெண்கள் அணியும் ஒரு உடைவிசேடம்.

P31, D2O; N14

அவள் முதற்கண் தலைவியினது இளமை, பேதைமை முதலிய கூறி, அக்குறையை மறுப்பள். தலைவன், தலைவி தனக்கு இன்றியமையாதமைகூறி, "குறைமுடிக்காவிடில் மடலேறுவேன், வரைபாய்வேன்" என்னலும், தோழி அவனை ஆற்றுவித்து அகற்றுவள். பின்னர், தோழி தலைவியிடம் சென்று தலைவனதுதன்மைகூறி, அவன் தந்த கையுறையைப் புகழ்வள். அதற்குத் தலைவி அறியாள் போன்றிருப்ப, தோழி தலைவனது துயர்நிலையை விரித்துக்கூறி, அக்குறையை ஏற்குமாறு செய்வள்.

இங்ஙனம் பாங்கியிற்கூட்டம்பெற்ற தலைமகன் பகலில், தான் தலைமகளைக்கண்டுகூடுமிடம் இது என்று குறியேற்படுத்திக்கொண்டு, அவளை அவ்விடத்தேகண்டு கூடி மகிழ்வன்; அன்றியும் இரவின்கண்ணுங் கூடவேண்டி அவன் இரவுக்குறியிரப்ப, முதலில் தோழி, ஆற்றினதுஅருமை, காவலினதுகடுமை முதலியனகூறி மறுப்பள்; பின்னர், தலைவன் அவற்றுக்குச் சமாதானங்கூறவே, அதற்குத் தலைவியும் தானும் இயைவள். அவ்விரவுக்குறி இல்லின்கண்ணேயே நிகழும்.

*"இரவுக்குறியேயில்லகத்துள்ளு
மனையோர்கிளவிகேட்கும்வழியதுவே
மனையகம்புகாக்காலையான"

†"இரவுக்குறியேயில்வரையிகவாது"

என்பன இலக்கணம்.

பற்குறிக்கு இவ் வரையறையில்லை.

இங்ஙனம் களவொழுக்கம் நிகழாநிற்பத் தலைவி காவலின் கடுமையினாலும், காமம் கைம்மிகுதலாலும், தலைவனுக்கு இரவின்கண் வரும்போது ஊறுநேரும் என்னும் அச்சத்தாலும், பிறவற்றாலும், தான் வரைவு விரும்புவதைத் தலைவனுக்குத் தோழிவாயிலாகத் தெரிவிப்பள். அதற்குத் தலைவன், அங்ஙனம் வரைந்துகொள்ளுதற்கு இடையூறு ஒன்று மின்றேல், தலைவியின் பெற்றோர்க்கு அந்தணப்

---

* தொல்காப்பியம்.

† இறையனுரகப்பொருள்.

பாங்கன்வாயிலாகத் தன் எண்ணத்தைத் தெரிவிப்பன். இதற்கு முன்னரே தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், முறையே, களவொழுக்கமாக நிகழ்ந்தவற்றைக் கூறி அறத்தொடுநிற்ப, நற்றாய் முதலியோர் அம் மணத்திநுக்கிணங்குவர். செவிலிக்குத் தோழி அறத்தொடுநிற்றலுக்கு, பத்துப்பாட்டினுள், குறிஞ்சிப்பாட்டில் "அன்னாய்வாழிவேண்டன்னையொண்ணுதல், ஒலிமென்கூந்தலென் றோழி.........நோக்கம்கலங்கிக்கையற்று ஆருச்சிறுமையள்" எனத் தொடக்கத்திற் கூறியுள்ளதை உதாரணமாகக்கொள்ளலாம்.

அன்றித் தலைவன் அப்போது வரைந்துசெல்லற்கு, தன்னாலாதல், தன்னைச் சேர்ந்தோராலாதல், தலைவியைச் சேர்ந்தோராலாதல், தன் எண்ணத்துக்கு ஊறுநேரும் எனக்கருதின், தலைவியிடத்து வரைவிடை வைத்துத் தான் பொருள்தேடப் பிரிந்து செல்வான். தன்பிரிவைத் தலைவன் தோழிவாயிலாகத் தலைவிக்குணர்த்த, அவளும், தோழியால் ஆற்றப்பெற்று, தலைவன்வரவினை எதிர்பார்த்து நிற்பள். பிரிந்துசென்றதலைவன், மிக்கபொருளுடன் விரைவில் திரும்பிவந்து, முன்னர்க்கூறியவாறே, தலைவியின்பெற்றோர்க்குத் தெரிவித்து அவளைக் கடிமணஞ்செய்துகொள்ளுவன்.

களவொழுக்கம் பிறரால் ஒருசிறிதும் அறியப்படாதவிடத்து மணநிகழுமாறு முன்னர்க் கூறப்பெற்றது. அங்ஙனமன்றி, தலைவனும் தலைவியும் களவிற் கூடிவருவது சிறிது சிறிதாகப்பிறர் ஐயங்கொள்ளுதற்கும் ஏதுவாம். பிறர் இத்தகைய ஐயங்கொண்டுழி, அதுபற்றித் தலைவன் தலைவியர் ஒழுக்கத்தினைக்குறித்து அலர்மொழி தோன்றினும் தோன்றும். இங்ஙனம் அலர்தோன்றியவழியும் தலைவியிடத்து வரைவுவேட்கைநிகழும். தோழியும் தலைவனிடத்து அக் காரணத்தினையும், தலைவியின் நாணமிக்கநிலையையும், தலைவியைப் பிறர் மணக்கவிருக்கின்றாரென்பதையும் எடுத்துக்காட்டிக் களவொழுக்கந்தவிர்ந்து கடிமணமுடித்துக்கொள்ளல் வேண்டுமெனக் கட்டுரைப்பாள்.

இந்நிலைமையுற்ற தலைவன், தான் அப்போதே வரைந்துகொள்ளுதற்குத் தடையொன்று மில்லாதவிடத்து முற்கூறியவாறே தலை

வியின்பெற்றோர்க்குத் தெரிவித்து, தலைவியை வதுவையாற்றிக்கொள்ளுவான்.

அன்றி, அப்போழ்தே மணஞ்செய்துகோடற்கு இயலாதவனாயிருப்பின், வேறுவழியின்மையால் தலைவியைச் செவிலி, நற்றாய், முதலியவர் அறியாவண்ணம் தன்னுடன்கொண்டு வெஞ்சுரம்கடந்து வேற்றூர்க்குச்செல்ல விரும்புவான். தலைவியும், கற்பும் நாணும் தம்முட்பொருத நெஞ்சினளாய், முதலிற் செயற்பாலது யாதெனத் தெரியாது கலங்குவள். பின்னர்,

* "உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"

என்று இலக்கணம் கூறியாங்கு, அவனோடு உடன்போக்குக்கிசைந்து செல்லுவள். அங்ஙனஞ்சென்ற தலைவியும் தலைவனும், கொடுப்பாரொருவருமின்றித் தாமே மணஞ்செய்து கொள்ளினும் கொள்வர். அங்ஙனம் செய்துகொண்டாலும் அது இழுக்காது என்பது,

"கொடுப்போ ரின்றியுங் கரணமு முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான"

என்னும் சூத்திரத்தாற் கிடைக்கப்பெறும்.

அன்றி அவர்கள் சென்ற வழியில்,

"பொன்போலுங் கள்ளிப் பொரிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கிசைந்தனளே"

என இரங்கிச் செவிலியும் பிறரும், அவளைத்தேடிச் சென்று, சுரத்திடை அவளைத் தலைவனுடன் கண்டு, பிறகு இருவரையும் மீட்டுவந்து, அவ்விருவர்க்கும் வதுவை செய்வித்தலும் உண்டு.

இவ்வாறு, இயற்கைப்புணர்ச்சி நிகழ்ந்த காலந்தொட்டு, வதுவையாற்றுங்காலம் வரையில்களவொழுக்கம் நிகழும்.

---

* தொல்காப்பியம்.

* "மறைந்த வொழுக்கத் தோரையு நாளுந்
துறந்த வொழுக்கங் கிழவோற் கில்லை"

என்பதும்,

† "களவினுட் டவிர்ச்சி கிழவோர்க்கில்லை"

என்பதும் இலக்கணமாதலால், தலைவனால் இக்களவொழுக்கத்துக்கு ஒருநாளும் இடையீடு நேரிடாது என்பது போதரும். நேரும் இடையூறுகள், தலைவியாலேயே, காவல் அதிகப்படுதலானும், தலைவி பிறவற்றால் நிகழ்ந்த குறிகளைத் தலைவன் செய்குறியென மயங்கிய தனானும், மற்றும் பிறவற்றானும் ஏற்படும்.

இக்களவொழுக்கத்துக்குக் காலவரையறை தொல்காப்பியனார் காட்டவில்லை. இறையனார் அகப்பொருளில்,

"களவினுட் டவிர்ச்சி வரைவி னீட்டம்
திங்க ளிரண்டி னகமென மொழிப"

எனச் சூத்திரம் செய்தாரேனும், நக்கீரனார், அதற்குத் தான் இயற்றிய உரையின்கண்ணே, "இஃது உலகத்து இயல்பன்று......... உலகத் தொழுக்கத்துக்குக் காலவரையறை யில்லை." என்று அதனை மறுத்துப்பேசுவதனால் களவொழுக்கத்துக்குக் காலவரையறையில்லை எனக் கொள்ளுவதே ஏற்புடைத்தாகும்.

இங்ஙனம் கூறப்பெற்ற களவொழுக்க விஷயங்களெல்லாம் தொல்காப்பியத்தின்கண்ணும், அதன் உரையின்கண்ணும், மிக விரிவாக, உளநூற் (Psychology) கொள்கைகட்கு ஒரு சிறிதும் மாறாது, விரித்துரைக்கப்பட்டுள்ளனவெனினும், ஈண்டு விரிவஞ்சி, ஆராய்ச்சிக்கு வேண்டுவனவற்றையே எடுத்துக்கொண்டு, இதுகாறும் சுருக்கமாய்க் கூறினோம்.

இனிக் களவொழுக்கம் நிகழ்ந்தபின்னர்க் கடிமணநிகழுமாறும், அங்ஙனம் மணஞ்செய்துகொண்ட காதலர் இல்லறத்தில் நின்று

---

* தொல்காப்பியம், களவியல்.

† இறையனாரகப்பொருள்.

ஒழுகுமாறும், ஆசிரியர் வகுத்த இலக்கணங் கருவியாக ஆராயப் புகுவாம்.

கற்பொழுக்கம்.

கற்பொழுக்கம் என்பது விதிப்படி மணஞ்செய்துகொண்ட தலைவனும், தலைவியும் அறநூல்களிற் கொள்ளற்பாலன என்பனவற்றைக் கொண்டும், தள்ளற்பாலன என்பனவற்றைத் தள்ளியும் இல்லறத்தின்கண்ணே வழுவாது ஒழுகுவதாம்.

"கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்று பள்ளிக்கூடச் சிறுவர்கள் பாடமோதுகின்றார்கள். கணவன் சொற்கு விரோதமின்றி நடப்பது கற்பென்பது இதன்பொருள்.

முன்னர்த் தாய்தகப்பனாலும், பின்னர்த்தலைவனாலும் இன்ன இன்னவாறு ஒழுகவேண்டுமெனத் தலைவிக்குக் கற்பிக்கப்படும் ஒழுக்கமாதலின் அது கற்பெனப் பெயர் பெற்றது. "கற்பாவது தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதோர் மேற்கோள்" என ஓரிடத்தும்,

"கொண்டானிற் சிறந்ததெய்வம் இன்றெனவும், அவனை இன்னவாறே வழிபடுக எனவும், இருமுதுகுரவர் கற்பித்தலானும், அந்தணர் திறத்தும், சான்றோர் தேத்தும், ஐயர் பாங்கினும் அமரர்ச்சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம் தலைமகன்கற்பித்தலானும் கற்பாயிற்று." எனப் பிறிதோரிடத்தும், "இவளை இன்னவாறு பாதுகாப்பாய் எனவும், இவற்கு இன்னவாறேநீ குற்றேவல் செய்தொழுகெனவும், அங்கியங்கடவுள் அறிகுறியாக மந்திரவகையாற் கற்பிக்கப்படுதலின், அத்தொழிலைக் கற்பென்றார்" என மற்றுமோரிடத்தும் நச்சினார்க்கினியர் நவின்று சென்றனர். இக்கற்பின் தூய்மையினை நம் தமிழ்ப் புலவர்கள் மிகச்சிறப்பாகப் பலவிடங்களிற் பாராட்டியிருக்கின்றனர்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுளகற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்"

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்றார் வள்ளுவனார்.

"உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"

எனத்தொல்காப்பியனாரும் கூறினார்.

கற்பின்சிறப்பு இத்தன்மைத்தாக, இனிக்களவொழுக்கம் முடிந்த பின்னர், தலைவன் தலைவியர் இல்லறம் நடத்துதற்குப் புகுமுன்னர்ச் செய்துகொள்ளும் மணத்தினது இயல்பு கூறுவோம்.

முன்னர் எண்வகை மணங்கள் இன்னவென எடுத்துச் சொல்லப்பட்டன. அவற்றை,

"அந்தணரருமறைமன்றலெட்டினுள்"

என இறையனார் அகப்பொருளினும்,

"மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள்"

எனத் தொல்காப்பியத்திலும், இம்மணங்கள் மறையோர் வகுத்தன என வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கின்றன.
மற்றும்,

"பொய்யுங் களவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்னும் சூத்திரத்தாலும், அதற்கு நச்சினார்க்கினியர் "முதனூலாசிரியர் கூறியவாறே களவுநிகழ்ந்தபின்னர்க் கற்புநிகழ்ந்தவாறு கூறித்......தாம் நூல் செய்கிற காலத்துப் பொய்யும் வழுவும் பற்றி, இருடிகள் கரணம்யாத்தவாறுங் கூறினார். அக்களவின்வழி நிகழ்ந்த கற்பும் கோடற்கென்றுணர்க." என்றுரைகூறியதாலும், இம்மண வேறுபாடுகளும், அவற்றுக்கு விதித்துள்ள விதிகளும், ஆரியர்க

ளால் தமிழ்நாட்டில், வழக்கம்பெறுவன வாயினஎனக்கொள்ளக் கிடக்கின்றது.

எனவே, 'பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்' கரணம் ஏற்பட்டதென்றால், கந்தருவத்திற்குச் சிறந்தகளவு நீக்கப்பட்டதோ என்றும், அங்ஙனம் களவொழுக்கம் நிகழுமேல், அது 'ஐயர் யாத்த' கரணவிதிப்படி கடியற்பாலதாயிற்றே என்றும் ஐயப்பாடு நிகழ்தல் கூடும். "அக்களவின்வழி நிகழ்ந்த கற்பும் கோடற்கு" என மேலே காட்டிய நச்சினார்க்கினியர் உரையினாற் களவொழுக்கந் தள்ளப்படவில்லை யென்பதும், "ஒருவனையும் ஒருத்தியையும் எதிர் நிறீஇ, இவளைக்கொள்ள இயைதியோ நீ எனவும், இவற்குக் கொடுப்ப இயைதியோ நீ எனவும் இருமுதுகுரவர் கேட்டவழி, இவர் கரந்தவுள்ளத்தான் இயைந்தவழிக்கொடுப்ப ஆகலின், அதுதானே ஒருவகையிற் கந்தருவ வழக்கமும் ஆம்" என மீண்டும் அவர் கூறுவதால் மணமக்கள் சம்மதம் பெற்றே மணவினை நிகழ்ந்ததென்பதும் பெறப்படும்.

இப்படி மணஞ்செய்யும்போது தலைமகன் தலைவிக்கு அணிகலன் பரிசமாக அளித்து, பெண்கொடுத்தற் குரியவர்களாகிய "தாயொடு பிறந்தாரும், தன்னையரும், தாயத்தாரும் ஆசிரியனும்" முதலியோர், பெண்ணைக்கொடுக்கத் தான் கொள்ளுவான். இதனால், இக்காலத்து, மாப்பிள்ளைகளுக்கு வரதக்ஷிணைகொடுக்கும்வழக்கம் அக்காலத்து இல்லை என்பது தெரியவரும். மற்றும் "முலைவிலை செப்பல்", "கன்யா சுல்கம்" முதலிய தொடர்மொழிகளால், பெண்ணுக்கே மணமகன் முற்காலத்தில் பரிசம் அளித்தனன் என்பது தெள்ளிதின் உணரலாகும். களவின் கண்ணே தலைவனோடு உடன் போக்கிற்குத் தலைவி இணங்கி, வேற்றூர்க்குப் போம்போது, அங்குக் கொடுக்கும் மரபினர் ஒருவருமிலாதல்பற்றி, பிறரால் கொடுக்கப் பெறுமலே, தான் தலைவனை மணந்துகொள்ளுதலும் அமையும், இதற்குச் சூத்திரம்,

"கொடுப்போ ரின்றியுங் கரணமு முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான" என்பது.

இதுகாறுங் கூறியவாற்றால் மணவினை நிகழுங்கால் மணமகள் காம இன்பந்துய்க்கத் தக்க பிராயத்தளாய் இருத்தல்வேண்டுமென்

பது அறிந்துகொள்ளற்பாலதெனினும், வெளிப்படையாகவே, நச்சி னார்க்கினியர் கல்யாணம் நடக்கும் முதல்

"மூன்று இரவில் முயக்கமின்றி........ஒழுகி........நிகழ்ந்த மனக்குறை தீரக் கூடிய கூட்டத்தின்கண்; அது நாலாநாள் இரவின் கண்ணதாகும்" எனவும், தலைவன் தலைவிக்குக் கூறுங் கூற்றாக. அவ் வுரையாசிரியரே மீண்டும், "முதனாள் தண்கதிர்ச்செல்வற்கும், இரண் டாநாள் கந்தருவருக்கும், பின்னாள் அங்கியங்கடவுட்கும் அளித்து, நான்கா நாள் அங்கயங்கடவுள் எனக்கு நின்னையளிப்ப, நான் நுகர வேண்டியதாயிற்று என வேதங் கூறுதலால்" எனவும் கூறியதனால், தலைவி தலைவனால் முயங்கி இன்பம் நுகரும் பருவத்தினள் ஆதல் வேண்டும் என்பது போதரும். ஆதலில் இக்காலத்துத் தமிழர்களி டத்துப் பெரிதும் காணப்படும் 'பால்யவிவாஹம்' என்பது அக்காலத் து வழங்கவில்லை என்பது இவ்வாராய்ச்சியினால் அறியப்பெறும்.

இவ்வாறு மணஞ்செய்துகொண்டு இல்லறத்தில் ஒழுகுங்காலை, தலைவன், தலைவியைப்பிரிந்துசெல்வது, இன்ன இன்ன காரணங்களால் நிகழும் என்பது இனிக்கூறப்படும்.

களவினுள், தலைவியைப் பிரிதலே கூடாது என்பது இலக்கண மெனினும், கடிமணம் எய்தி, இல்லறத்தே ஒழுகுங்கால், தலைவன் காரணத்தால் தலைவியைப் பிரிவது தவறாகாது.

"கற்பினுட் டுறவே கடிவரை யின்றே"

என்றார் இறையனாரும். அங்ஙனம் மனைவியைப்பிரிதல் கல்விகற் றல், நாடுகாத்தல், தூதுபோதல், அரசர்க் குதவிசெய்தல், பொரு ளீட்டல், பரத்தைவிருப்பு ஆகிய இவைபற்றி நிகழும். இதனை,

"ஓதல் பகையே தூதிவை பிரிவே"
"பொருள்வயிற் பிரிதலு மவர்வயி னுரித்தே"

எனத் தொல்காப்பியனாரும்,

"ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்
றாங்கவ் வாறே யவ்வயிற் பிரிவே"

என்று இறையனாரும் கூறியிருக்கின்றார்.

இதனுள் ஓதலிற்பிரிவை அதன்சிறப்புப்பற்றி முதலிலும், பரத்தையிற்பிரிவை அதன் தாழ்வுபற்றி ஈற்றிலும் வைத்துளார்.

இவற்றுள் பெரும்பாலும் ஓதலும் தூதும் அந்தணர்க்கும் அரசர்க்கும் உரியன என்பதும், நாடுகாத்தல் பகைமேற்சேறல் என்பவை அரசர்க்கே சிறப்பாக உரிய என்பதும், வேந்தர்க்குக் குற்றேவல் செய்தல், பொருள்வயிற்பிரிதல் என்பன வணிகர், வேளாளர் இவர்கட்குரிய என்பதும், பரத்தையிற்பிரிவு எல்லார்க்கும் உரிய என்பதும்,

* "அவற்றுள்
ஓதலுந் தூது முயர்ந்தோர் மேன"

† "வேந்தர்க் குற்றுழிப் பொருட்பிணிப் பிரிவென்
றுங்கவ் விரண்டு மிழிந்தோர்க் குரிய"

‡ "பரத்தையிற் பிரிவும் பொருள்வயிற் பிரிவும்
உரைத்தநால் வர்க்கு முரிய வாகும்"

என வரும் இலக்கணங்களால் அறியப்படும்.

இப்பிரிவுகள் இன்னாரின்னார்க்கு உரியவை என்பதைச் சிற்சில வேறுபாடுகளுடன் நம்பியகப்பொருளிலே 62-முதல் 79வரையுள்ள சூத்திரங்களில் விரிவாகக் காணலாம்.

இவைபோன்ற பிரிவு மகளிர்மாட்டில்லையென்பது,

"முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை"

என்னும் சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் ஓதல், தூது, பகை என்னும் இம்மூன்றுதன்மைபற்றி மகளிர், ஆடவரைப்பிரிந்துபோதல் வழக்கமில்லை என்பதனாற் பெறப்படும்.

அச்சூத்திரத்திற்கே முந்நீரென்பதற்குக் கடல் எனப் பொருள் கூறிக் கடலிற் கப்பல் ஏறிச் செல்வது தலைவிக்கு வழக்கமில்லையென்று இரட்டுறமொழிதல் என்னும் உத்தியாற் பொருள்கூறலும் அமையும்.

---

* தொல்காப்பியம்.
† இறையனாரகப்பொருள்.
‡ நம்பியகப்பொருள்.

இவ்விரண்டாமுரையாலே, பொருள்வயிற்பிரிதல் முதலியவற்றில் தலைவன், தலைவியை நாட்டின்கண்ணே உடன் அழைத்துப் போயினும், கடலின்கண்ணே கலத்திலேற்றிக்கொண்டுபோகான் என்பது போதரும்.

அந்தணரும் மனைவியிற்பிரிந்துசெல்லுங்காற் கடல்கடந்து செல்லார் என்பது நச்சினார்க்கினியர் கருத்து.

* "புலத்திற் சிறந்த புரிநூன் முதல்வர்க்குக்
கலத்திற் சேறல் கடனன் றென்ப"

என்பதிலக்கணம்.

ஆடவர் மகளிரொடு கடன்மேற்செல்லுதல் கடியப்பட்டவாறு போல, போர்க்களத்திற் பாசறைக்கண்ணும், அவர்கள் மகளிரொடு சேர்ந்திருத்தல் விலக்கப்பட்டது.

"எண்ணரும் பாசறைப் பெண்ணொடு புணரார்"

எனத் தொல்காப்பியனாரும்,

"குலமட மாதரொடு கலமிசைச் சேறலும,
பாசறைச் சேறலும் பழுதென மொழிப"

என நாற்கவிராஜநம்பியும் கூறியிருக்கிறார்.

இனி, இத்தகைய பிரிவுக்கு எல்லை கூறுவோம்.

ஓதலிற்பிரிவாயின் அது மூன்றுவருஷங்களுக்குமேற்படாது; மற்றைப்பிரிவுகளெல்லாம் ஒருவருஷத்துக்குட்பட்டதாக வேண்டும். இவை,

"வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது"
"வேந்துறு தொழிலே யாண்டின தகமே"
"ஏனைப் பிரிவு மவ்வயி னிலையும்"

என்னுந் தொல்காப்பியச்சூத்திரங்களால் அறியப்படும்.

இங்ஙனம் பிரிந்துசெல்லுமிடத்து, தலைவி யிரங்குதலன்றித் தலைவனும் இரங்குவான்; அங்ஙனம் மனம் அழுங்கிப் பின், தலைவியைத் தேற்றுவித்துத் தான் பிரிந்துசெல்வன். பட்டினப்பாலையில், தலைவன்

---

* நம்பியகப்பொருள்.

"முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே"

என்பதும், அதற்கு நச்சினார்க்கினியர் "'வாரேன்' என்றான் அவளை ஆற்றுவித்துப் பிரிதல் கருதி. அது *'செலவிடை யழுங்கல் செல்லாமையன்றே, வன்புறை குறித்தல் தவிர்ச்சியாகும்', என்பதனால் உணர்க." என உரைவிசேடங்காட்டிப் போந்ததூஉம் இங்கு நோக்கற்பாலது.

அங்ஙனம் தலைவன் பிரிந்துழி, தலைவி அவன் வருமளவும், ஆற்றாது மனமழிந்துநிற்பத் தோழி அவளுக்குத் தலைவன்வரும்பருவம் இது என்பதும், பிறவுங்கூறித் தேறுதல்சொல்லுவள். மீண்டுவரும் தலைவனும் இடையில் எங்குந்தங்காது, மிக்கவேகமாகச்செல்லும் பரிமாபூட்டியதேரூர்ந்து கடுகி வந்தெய்துவன். முல்லைப்பாட்டில் வாயில்கள் தலைவன் திரும்பிவரும்போது அவன் தேரிற்பூட்டிய குதிரைகள் ஆரவாரித்தன என வியந்தமை இங்கு உணரற்பாலது.

பிரிவும் பிரிந்தபின் சேர்தலும் இத்தன்மையனவாக, இனித் தமிழிலக்கிய இலக்கணங்களில், தமிழர் நாகரீகத்துக்கே ஓர் இழுக்குத் தோன்றுமாறு மிகுதியாகக் காணப்படும் பரத்தையரைப்பற்றித் தொல்காப்பியத்திற் காணப்படுவனவற்றைச் சுருக்கியுரைப்பாம்.

பரத்தையர், காமக்கிழத்தியர் என்றும், காதற்பரத்தையர் என்றும் இருதிறத்தவராவர். இவர்களுள், "காமக்கிழத்தியராவார் கடனறியும் வாழ்க்கையுடையராகிக் காமக்கிழமைபூண்டு இல்லறநிகழ்த்தும் பரத்தையர்; அவர் பலராதலிற் பன்மையாற் கூறினார். அவர், தலைவன் இளமைப்பருவத்திற்கூடி முதிர்ந்தோரும், அவன் தலைநின்றொழுகப்படும் இளமைப்பருவத்தோரும், இடைநிலைப்பருவத்தோரும், காமஞ்சாலா இளமைப்பருவத்தோரும் எனப் பலபகுதியாம். இவரைக் கண்ணிய காமக்கிழத்தியர் எனவே கண்ணாத காமக்கிழத்தியரும் உளராயிற்று. அவர், கூத்தும் பாட்டும் உடையராகிவரும் சேரிப்பரத்தையரும், குலத்தின்கண் இழிந்தோரும்...பிறருமாம்" என நச்சினார்க்கினியர் "புல்லுதன் மயக்கும் புலவிக்கண்ணும்" என்னும்

* தொல்காப்பியம். பொருளதிகாரம். சூத்திரம் 185.

சூத்திரத்தின் உரையில் எழுதியதனுல், தலைமகன், தலைவியொருத்தி மாட்டே காமவின்பம் நுகரும் இலக்கணமுடையவனல்லன் என்பது போதரும்.

இது, "காதற் பரத்தை யெல்லார்க்கும் உரித்தே" என்னும் இறையனுர்சூத்திரத்தானும் பெறப்படும்.

தலைவன், பரத்தையிடஞ்சேர்தல்பற்றித் தலைவி வருந்துதலும், தலைவன் திரும்பிவந்தவிடத்து அவனோடு ஊடலும், அவ்வூடல் தவிர்ப்பதற்கு வாயில்களாக *"தோழி தாயே பார்ப்பான் பாங்கன், பாணன் பாடினி யிளையர் விருந்தினர், கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்" இவர்களைப்போக்கித் தலைவியினது ஊடலைநீக்கத் தலைவன் முயலுவதும், பிறவும் இலக்கணத்தில் மிக்கவிரிவுடன் கூறப்பட்டுள்ளன. இவற்றுல் அக்காலத்துப் பரத்தையர் மிகுந்திருந்தனர் என்பது எளிதில் உணர்ந்துகொள்ளற்பாலது.

மற்றும், ஜீவகசிந்தாமணியிலும், பிற வருணனைநூல்களிலும் பரத்தையர்சேரிவருணனையை, நகரப்படலத்தின்கண்ணேவைத்திருப்பதும், பரத்தையர் செல்வாக்கு எத்துணைதூரம் சென்றிருந்ததென்பதனை வெள்ளிடைமலையென விளக்கிக்காட்டும்.

இவற்றுல் தலைவன் பலபெண்களைக் கூடுதல் கூறிய இலக்கணத்துக்கு அக்காலத்தில் மாறுகவில்லை என்பது போதரும்.

இங்ஙனம் வரையறையின்றித் தலைமகன் ஒழுகல் சாலுமோ எனின்,

" புதல்வற் பயந்த புனிறுசேர் பொழுதிற்
......சேர்தற் கண்ணும் "

என்பதற்குச் "சேர்தல் கூறவே, கருப்பம் முதிர்ந்தகாலத்துத் தலைவன் பிறரொடு கூட்ட முண்மையும் கூறிற்றும்" என்று நச்சினுர்க்கினியர் உரைகூறியதால், அங்ஙனம் தலைவன் பிறருடன்கூடியது, தலைவி தன்னோடு காமவின்பம் நுகர்தற்கு இயலாதிருந்தகாலத்தில் என்று ஒருவாற்றுற் சமாதானங்கூறலாமெனினும், நாகரீகமுறைபற்றி ஆராய்வுழி, அது குற்றமுடைத்தேயாம்.

---

* தொல்காப்பியம்.

மற்றும், "பின்முறை யாக்கிய பெரும்பொருள் வதுவைத், தொன்முறை மனைவி யெதிர்ப்பா டாயினும்" என்னும் சூத்திரத்தில், தலைவனுக்கு "தொன்முறைமனைவி யிருப்பவும், பின்முறையாக்கிய" வதுவையும் உண்டு என்பது போதரும். அதனை, இச்சூத்திரத்துரையி லே நச்சினார்க்கினியர் "அந்தணர்க்குப் பின்முறை மூன்றும், அரசர்க் கிரண்டும், வணிகர்க்கொன்றும் நிகழ்த்தல்வேண்டுமென வேதநூல் கூறிற்றென்பது" எனக்கூறியிருப்பதனாலும் உணரலாம்.

இனி இறையனாரகப்பொருளில், தலைமகள் ஊடியவழித் தோழி அவ்வூடல் தவிர்ப்பாள் "அல்லதூஉம் வண்டோரனையர் ஆடவர். பூவோரனையர் மகளிர் என்பது, என்னை? வண்டுகள் தாதூதுமிடத்து நன்மலரே ஊதுவேமென்னா; எல்லாமலரும் ஊதும். இனிப் பூ அவா வினக்கால், எம்மையே ஊதா, எல்லாப் பூவையும் ஊதினவென்று புலவாதன்றே; அதுபோல வழிபடுதலல்லது மலைத்தற்கண்ணேம் அல் லேம்" என உரையிற் காணப்படுவதும், அக்காலத்துத் தமிழரில் ஆட வர் 'ஏகபத்னிவிரதம்' பூண்டவர்கள் அல்லர் என்பதற்குப் போதிய சான்றாகும்.

இது நிற்க:—இனித் தொல்காப்பியனார் தலைவன், தலைவி, செவிலி, தோழி, பரத்தை முதலியவர் இவ் விச்சமயத்திற் பேசுதல்வேண்டு மென்று கூறியிருப்பது உளநூற்கொள்கைக்கு ஒத்ததாகவேயிருக் கிறது. அவர் கூறியிருக்கும் இவ்விலக்கணங்கட்கு ஷேக்ஸ்பியர், காளிதாசர் முதலிய நாடகாசிரியர்கள் நூல்களிலிருந்து அப்படி அப் படியே உதாரணங்காட்டல் அமையும்.

மெய்ப்பாட்டியலின்கண் ஆசிரியர் "நகையே, அழுகை, இளி வரன், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை" என்னும் இவ்வுணர்ச்சிகளினது இயல்பினையும், அவை எவ்வெக்காலத்து நிக ழும் என்பதையும், அவை அகத்தேநிகழுங்காலத்துப் புறத்தே எவ் வெக்குறிகள் தோன்றுமென்பதனையும் மிக அழகாக விரித்துச் சொல் லியிருக்கிறார். இம்மெய்ப்பாட்டுவிரிவெல்லாம் நூல்வாயிலாக உணர் ந்துகோடற்கியலாதென்றும், கண்ணானும் செவியானும் நன்கு அறி ந்துகொள்ளும் அறிவுடையார்க்கே விளங்கும் என்றும்,

"கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதி னுணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"

என்னும் புறனடைச் சூத்திரத்தால் விளக்கிப்போந்தனர்.

இங்ஙனம் விரிவாக இல்லறநிலைக்கு இலக்கணம்வகுத்தவர், அவ் வில்லறம் எதனெடு முடிவுபெறும் என்பதனைக் கூருமற்போகவில்லை.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்னும் சூத்திரத்தால் தலைவனும், தலைவியும் காமவின்பம் வேண்டு மளவு நுகர்ந்து, அதன்கண் வெறுப்புற்றவராய், வீடுபேற்றிற்குச் சிறந்தகருவியாகிய துறவினை மேற்கொள்வர் என்பது கூறினர். இதனுரையின்கண்ணே நச்சினர்க்கினியரும் "ஏமஞ்சான்றவாவன, வானப்பிரத்தமும் சன்னியாசமும் எனவே இல்லறத்தின்பின்னர் இவற்றின்கண்ணே நின்று பின்னர் மெய்யுணர்ந்து வீடுபெறுப என்றார்" என்று விரித்துரைத்தனர்.

இதுகாறும், களவின்கண், தெய்வசங்கற்பத்தால் எதிர்ப்பட்ட தலைவன் தலைவியர் இயற்கைப்புணர்ச்சி நிகழ்த்தியது முதலாக, அவர் துறவு பூண்டு வீடுபேற்றிற்குரிய முயற்சிசெய்வதீருக அகப்பொருள் விஷயமெல்லாம் தொல்காப்பியஇலக்கணங் கருவியாகக்கொண்டு தொகுத்துக் கூறினேம். இனிப் பொருளின் மற்றைப்பகுதியாகிய "புறப்பொருள்" இலக்கணத்தினை ஆராய்வோம்.

புறப்பொரு ளிலக்கணம்

திணைப்பாகுபாடு.

புறப்பொருள் என்பது யாது என முன்னர்ப் பொருளினது சிறப்பும் பாகுபாடும் கூறிய இடத்திற் கூறப்பட்டது. அது, "ஒத்த அன்புடையார்தாமேயன்றி எல்லாராலும் அனுபவித்துணரப்பட்டு இஃதிவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக்கூறப்படுவதாய் அறமும் பொரு

ளூம் என்னும் இயல்பினையுடையதாய்ப் புறத்தேநிகழும் ஒழுக்கம்" என்று பிரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாயர் வே. சாமிநாதையரவர்களால் விளக்கப்பட்டிருக்கிறது.

நச்சினார்க்கினியர் "வெட்சிமுதலா வாகையீறாக அறனும் பொருளும் பயக்கும் அரசியல்கூறி, அவற்றது நிலையின்மை காஞ்சியுட்கூறவே, அறனும், பொருளும், அவற்றது நிலையின்மையுங் கூறினார். இந்நிலையாமையானும் வீட்டுக்குக் காரணம் கூறினார்" என்று கூறுவதனாலே அகத்திற் கூறப்படும் இன்பம் நீங்கலாக அறம், பொருள், வீடு இவை புறத்தின்கண்ணே கூறப்படும் என்பது போதரும்; சிறப்புப்பற்றி யரசர்செயலே பெரிதும் புறத்தின்கண்ணே காணப்படுகின்றது.

அகப்பொருளுக்குத் திணை யேழுகூறியதுபோலவே, புறப்பொருட்குத் தொல்காப்பியர் ஏழ்திணை கூறுவர். அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பன. புறப்பொருள்வெண்பாமாலையுடையார் கரந்தை, நொச்சி, பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்னும் ஐந்தையும் இவற்றுடன் சேர்த்துப் புறத்திணை பன்னிரண்டு என்பர். "பன்னிருபடலம்" என்னும் நூலின்பெயரே, அப்பழையநூலிலும் பன்னிரண்டு திணைப்பாகுபாடுகளே இருந்தனவென்பதைக் காட்டும்.

அங்ஙனமாயின், தொல்காப்பியர் இவ்வைந்திணைகளையும் விடுத்தமை எதுபற்றி எனில் அவர் அவற்றை அறவே நீக்காது வெட்சியிற் கரந்தையையும், உழிஞையில் நொச்சியையும் அடக்கினார் என்றும், கைக்கிளை, பெருந்திணை இவ்விரண்டினையும் 'அகப்புறம்' எனக்கொண்டு அகத்திணைகளுட்,சேர்த்தார் என்றும்,பொதுவியலைத் திணையெனக்கொள்ளாது, பொதுவிலக்கணமாகக் கூறினார் என்றும் கொள்ளுதல் வேண்டும்.

இனி இவ்வேழ்திணைகளின் இலக்கணங் கூறுவாம். இவற்றுள்,

வெட்சித்திணையாவது பகைநாட்டாரதுபசுக்களைக் கவரும் ஒழுக்கம். இதற்கு,

" வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந் தோம்பன் மேவற் றாகும் "

என்பது சூத்திரம். இதன்கண்ணேயே நிரைமீட்டலும் அமைத்துக் கொள்ளல்வேண்டும் என்பது தொல்காப்பியர், நச்சினார்க்கினியர் என்னும் இருவர்க்கும் உடன்பாடாயகருத்து.

நிரைமீட்டலைக் கரந்தையென்று வெண்பாமாலையிலும், பிற இடங்களிலும் கூறியிருக்கிறதே எனின் "அது திணையாயின், குறிஞ்சிக்குப்புறனாகாமைபுணர்க" என்றுகூறி நச்சினார்க்கினியர் மறுக்கின்றனர்.

2. வஞ்சித்திணையாவது பகைவருடையநாட்டைக் கொள்ள நினைந்து போர்செய்தற்கு அவர்மேற்சேறல், இதற்குச் சூத்திரம்,

"எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே" என்பது.

3. உழிஞைத்திணையாவது பகைவருடையமதிலைவளைத்துக் கொண்டு முற்றுகைபோடல். இது,

"முழுமுத லரண முற்றலுங் கோடலும்
அனைநெறி மரபிற் றாகு மென்ப."

என்னும் இலக்கணத்தால் அறியப்படும். இதன்கண்ணேயே முற்றப்பட்டவன், தன் மதில்காக்கும் ஒழுக்கமாகியது 'நொச்சித்திணை' என்பதையும் ஆசிரியர் அடக்கினர்.

4. தும்பைத்திணையாவது பகைவர் நேராக எதிர்க்க அவருடன் கலந்து பொருவது.

"மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை யழிக்குஞ் சிறப்பிற் றென்ப."

என்பது அதற்கு இலக்கணம்.

5. வாகைத்திணையாவது பகைவர்மேல் வெற்றிகொள்வது. இது அரசர்க்குமாத்திரமன்றி நான்குவருணத்தார்க்கும் பொதுவாயது,—

"தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப"

என்பது சூத்திரமாதலின்.

6. காஞ்சித்திணையாவது வீடுபேறுநிமித்தமாகச் செல்வநிலையாமை, யாக்கைநிலையாமை முதலிய பல்வேறுநிலையாமையைக் கூறுவது. இதற்குச் சூத்திரம்,

"பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே"

என்பது. இக்காஞ்சித்திணையானது, தன்மீது போர்செய்தற்கு எழுந்த வேற்றுநாட்டானைத் தான் எதிர்க்கும் அரசன்செயலைக்கூறுவது என்னும் கருத்துடன்,

"வெஞ்சின மாற்றான் விடுதர வேந்தன்
காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று"

எனப் புறப்பொருள்வெண்பாமாலையாரும்,

"வஞ்சியுங் காஞ்சியுந் தம்முண் மாறே"

எனப் 'பன்னிருபடல'முடையாரும் இலக்கணம் கூறுவர்.

7. பாடாண்டிணையாவது பாடப்பெறுந் தலைவனது கொடை, கீர்த்தி, வலி, தயை, வீரம் முதலியவற்றைப் புகழ்ந்துசொல்லுவது. இன்ன இலக்கணங்கள்வாய்ந்த ஏழுபுறத்திணைகளையும், முன் அகத்திணைகளெனக் கூறப்பட்ட ஏழுக்கும், ஒவ்வொன்றுக்கு ஒவ்வொன்றாகப்'புறன்' என்பர் தொல்காப்பியர். வெட்சி குறிஞ்சிக்கும், வஞ்சி முல்லைக்கும், உழிஞை மருதத்துக்கும், தும்பை நெய்தலுக்கும், வாகை பாலைக்கும், காஞ்சி பெருந்திணைக்கும், பாடாண் கைக்கிளைக்கும் புறன் என முறையே கொள்ளல்வேண்டும்.

இங்ஙனம் அகத்திணையோடு புறத்திணைகளை முறைப்படுத்தியதில் இயைபு ஏதேனும் உண்டோ என்பதைச் சற்று ஆராய்வோம்.

குறிஞ்சிக்குக் களவொழுக்கத்தின்கண்ணே தலைவன் இரவில் தலைவியைச்சேர்தல் அமையுமாறுபோல வெட்சிக்குங் களவாலே இரவிற் பசுக்கவர்தல் இலக்கணமாதலின் அவ்விரண்டற்கும் இயைபுண்டென்பதும்,முல்லைக்கு நிலம் காடும், பொழுது கார்காலமும், ஆதல்போல வஞ்சிக்கும் அவையேயாதலாலும், தலைவி முல்லைக்குத் தலைவனைப்பிரிந்து மனைவயின் இருத்தல்போல வஞ்சிக்கும், தலைவன்பாச

றைக்கண்ணுளளுதல்பற்றி அவனைப்பிரிந்து மனைவயின் இருத்தலா லும் அவ்விரண்டற்கும் இயைபுண்டென்பதும், மருதத்திற்குரியநிலமே பெரும்பாலும் மதில் அமைந்துள்ள இடமாதலானும், ஊடலின்கண் தலைவன்வேண்ட, தலைவி வாயின்மறுத்தல்போல உழிஞையின்கண் ணும் ஒருவன் வாயில்வேண்ட மற்றொருவன் மறுத்தலாலும் இவை யிரண்டற்கும் ஒற்றுமையுள்ளதென்பதும், இங்ஙனமே உற்றுநோக் கின், பெரும்பாலும் நிலமும், பொழுதும், உரிப்பொருளும் ஒத்து இருத்தலின், மற்றைத்திணைகளுக்கும் இயைபுண்டென்பதும் பெறப் படும்.

இப் புறத்திணைப்பாகுபாடுகளிற் பெரும்பாலன பூக்களின்பெய ராதலால் தமிழர், போர்க்காலத்தில் அவ்வப்பொழுது இருக்கும் போரின் நிலைமைக்கு அறிகுறியாக வேறுவேறு மலர்களைச்சூடிக் கொள்வர் என்பது உணரப்படும்.

இனி, இத்திணைகளுக்குத் துறைவகுத்துள்ளதைச் சற்று நோக்குவாம். ஒவ்வொருதிணையிலும் நிகழும் பலவேறுசெயல் களை முறைப்படுத்தி, இலக்கண ஆசிரியர்கள் துறைப்பாகுபாடு செய்துள்ளார்கள். எனினும் அப்பாகுபாடுகள் முடிந்த இலக்கணத் தன என்றுகொள்ளுதல் சரியன்று. ஏனெனில், புறநானூற்றிற் கூறப் பெற்றுள்ள செய்யுட்களிற்பல, நச்சினார்க்கினியரால் அவற்றின் உரை யிற் கூறப்பட்டுள்ள துறைகளின் வேறாயதுறைகளுக்கு உதாரண மாகக் காட்டப்பெற்றுள்ளன. அன்றியும் ஒவ்வொரு துறையும், தன்னுள்ளே உள் துறைகள் பலவற்றை யடக்கியதாகும்.

இக்காரணங்களாலே தொல்காப்பியத்திற்கும், வெண்பாமாலைக் கும் துறைப்பாகுபாட்டில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

திணை, துறை இவற்றின்தன்மை யிவ்வாறாக, இனி ஆசிரியர் இவற்றிற்கு விரித்துக்கூறும் இலக்கணத்தாலும், அதன் உரையா லும் பண்டைக்காலத்திற் போர்த்தொழில் நடந்தவாறும், பிறவும் ஆராயப்படும்

பண்டைக்காலத்துப் போர்த்தொழில் முதலியன.

ஓரரசன், மற்றோரரசன்மேல் தனக்குள்ளபகைமையை அவன் நாடுசென்று அங்குள்ளபசுக்களைத் தானேயாவது தன்வீரரைக் கொண்டாவது கவர்ந்துகொண்டு தெரிவிப்பான். இது வெட்சித் திணைக்குக்கூறிய இலக்கணத்தால் தெரியவரும். பொருவது கருதி யக்கால் ஒருவர் ஒருவர்நாட்டுவாழும் அந்தணரும், ஆவும் முதலிய ....கொண்டுவந்து பாதுகாத்தலும்" என்று நச்சினார்க்கினியர் கூறுவதால், அந்தணரையும் பகைநாட்டினின்றும் அகற்றுவர் என் பது தெரியவரும்.

இங்ஙனம் பசுக்கவர்தல் பண்டைக்காலந்தொட்டு வழக்கமா யிருந்ததென்பது, சீவகசிந்தாமணியில் கோவிந்தையாரிலம்பகத்தில் அரசனுடைய பசுக்கள் கவரப்பட்டதும், அவற்றை, சீவகன் மீட்ட தும் கூறியிருத்தலாலும், பாரதத்தில் துரியோதனன், விராடனுடன் போர்தொடங்குங்கால் அவன்பசுக்களைக்கவர்ந்துசென்றது சொல் லப்பட்டிருப்பதாலும், அறியக்கிடக்கின்றது. இதுபோன்ற வழக் கம், இங்கிலாந்து முதலிய மேனாடுகளிலும் 'Cattle lifting' என் னும் ஆங்கிலப்பேரால் நிகழ்ந்துவந்தது. இதனால் அக்காலத்துப் பசுக்கள் 'திரவ்யமாக'க் கருதப்பட்டுவந்தனவென ஊகித்தற் கிட முண்டாகிறது. திரவ்யசம்பந்தப்பட்ட என்னும் பொருளில்வரும் Pecuniary என்னும் ஆங்கிலச்சொல், ஆடுமாடுகள் என்னும் பொ ருளுடைய 'Pecus' என்னும் சொல்லினடியாகப்பிறந்துள்ளதும் இதனையே வற்புறுத்தும்.

இங்ஙனம் பகைமைக் கறிகுறியாகத் தாம் கவர்ந்தபசுக்களை மிக்க அன்புடன் தமிழரசர் பாதுகாத்துவந்தனர் என்பதுதோன்ற வெட்சித்திணைச்சூத்திரத்தில் "ஆதந்தோம்பல்" என்று கூறியுள்ளார் தொல்காப்பியர்.

போர்தொடங்குவதற்குமுன் நாளும், புள்ளும், பிறவுமாகிய நிமித்தம் (சகுனம்) பார்த்தே பின்னர் அத்தொழிலின்கண் பிரவே சிப்பர் என்பது,

"நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமும்
................கண்ணிய வருமே"

என இலக்கணஞ்செய்துள்ளமையாற் போதரும்.

இனி வஞ்சித்திணைக்குக்கூறிய, இலக்கணத்தினுற் பெறப்படுவனவற்றைக் கூறுவோம்.

போர்நிகழ்வதற்குக் காரணம் பிறநாடுகவர்தலும் ஆம் என்பது, "எஞ்சாமண்ணசை" என்று சூத்திரத்திற் கூறியதனுல் அறியப்படும். அங்ஙனம் "மண்ணசை" யாற் பிறநாட்டினை எதிர்த்தாலும், போரின்கண்ணே தமிழர்கள், * "மடிந்த உள்ளத்தோனையும், மகப்பெறுதோனையும், மயிர்குலைந்தோனையும், அடிபிறக்கிட்டோனையும், பெண்பெயரோனையும் படையிழந்தோனையும், ஒத்தபடை எடாதோனையும், பிறவும் இத்தன்மையுடையோரையும் கொல்லாதுவிடுத்தலும், கூறிப்பொருதலும்" இவைபோல்வன செய்து, வீரத்தோடு கருணையும் பொருந்தியவர்களாயிருந்தனர். இதனைப் புறப்பொருள்வெண்பாமாலையில்,

" அழிகுநர் புறக்கொடை யயில்வா ளோச்சாக்
கழிதறு கண்மை காதலித் துரைத்தன்று "

என்பதாலும் அறியலாகும்.

இன்னும், "பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்" என்பதிலக்கணமாதலால், போர்வீரர்க்கு உணவு மிக அளித்தனர் தமிழ்வேந்தர் என்பது போதரும். இக்காலத்துப் போரின்கண்ணே வீரங்காட்டுபவர்க்குக் கௌரவபட்டம் இராஜாங்கத்தார் அளிப்பது போல அக்காலத்து அரசர்களும், செய்துவந்தனர் என்பது,"சிறப்பாவன: ஏனுதி, காவிதி முதலிய பட்டங்களும்..........முதலியனவும் பெறுதலுமாம்" என நச்சினுர்க்கினியர் உரையிற்கூறியிருத்தலாற் கிடைக்கப்பெறும்.

இங்ஙனம் பெருந்தன்மைக்குணம் காட்டிவந்த தமிழ்வீரர்கள் தோற்றெழிந்த பகைவனதுநாட்டினைக் கொள்ளைகொள்ளுதல், தீவாய்ப்படுத்தல், கழுதையாலுழுது வரகுவிளைத்தல் முதலிய தகாத

* நச்சினுர்க்கினியர் உரை. (புறத்திணையியல் உழிஞைச்சூத்திரத்துக்கு)

செயல்களும் செய்துவந்திருக்கிறார்கள். இவையெல்லாம், தமதுவீரத்தினைப் பிறர்க்குப்புலப்படுத்தும்வண்ணம் அவர் செய்தனர்போலும். இங்ஙனம் அவர் செய்துவந்தது, "எரிபரந்தெடுத்தல்" "அடுத்தூர்ந்தட்ட கொற்றத்தானும்" என்று தொல்காப்பியத்திற் சூத்திரஞ்செய்துள்ளமையாலும்,

* "பேழ்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய்து........." என்பதனாலும்,

"எண்ணார் பல்லெயில் கழுதையே ருழுவித்
துண்ணா வரகொடு கொள்வித் தின்று" என்றும்,

"எழுதெழின் மாடத் திடனெலா நூறிக்
கழுதையேர் கையொளிர்வேல் கோலா—உழுததற்பின்
வெள்வரகு கொள்வித் திடினும் விளியாதற்
கள்விரவு தாரான் கதம்" என்றும்,

புறப்பொருள்வெண்பாமாலையிற் கூறியுள்ளமையாலும்,

கரிகாற்சோழனது போர்த்திறத்தினைவியந்து பட்டினப்பாலையில்

"அருங்கடி வரைப்பி னூர்கவி னழியப்
பெரும்பாழ் செய்தும் அமையான்"

என்று கூறியிருப்பதனாலும், தெற்றென உணரப்படும்.

வஞ்சித்திணைக்குக் கூறிய இலக்கணத்தால் இவை அறியப்பட்டனவாக, இனி உழிஞைக்குக் கூறிய இலக்கணத்தால் உணரற்பாலன யாவை என நோக்குவோம்.

பகைவன்பட்டணத்தின் புறமதிலைத்தாக்குவது உழிஞை எனவே நகர்க்கெல்லாம் மதிலரண் அமைந்திருந்ததென்பது வெளிப்படை. இம்மதில்தானும், மிக்க உரனுடையதாய், எளிதிற் பகைவரால் தாக்கப்படாததாய், அமைக்கப்பட்டிருக்கும் என்பது சூத்திரத்தில் "முழுமுதலரணம்" என்பதனாற் போதரும். இன்னும், இம்மதில் பகைவரையழிக்கவல்ல பல எந்திரங்கள்பொருந்தப்பெற்று, பெரிய

* நச்சினார்க்கினியர் உரையிற் கண்டமேற்கோள்.

தோர் அகழாற்சூழப்பெற்றிருக்கும் என்பது, "அது வஞ்சனைபல வும்வாய்த்துத் தோட்டிமுள் முதலியபதித்த காவற்காடும், அதனுள் ளே இடங்கர்முதலியன உள்ளுடைத்தாகிய கிடங்கும் புறஞ்சூழ்ந்து, யவனர் இயற்றிய பலபொறிகளும் ஏனைப்பொறிகளும் பதணமும், மெய்ப்புழைஞாயிலும் ஏனையபிறவும் அமைந்து, எழுவுஞ் சீப்பு முதலியவற்றால் வழுவின்றமைந்த வாயிற்கோபுரமும், பிற எந்திரங் களும்பொருந்த இயற்றப்பட்டதாம்" என நச்சினார்க்கினியர் விரித் துரைத்ததால் உணரப்படும். அன்றியும் ஜீவகசிந்தாமணியில்,

* "ஆய்முகில் தழீஇயசும் பருத நெற்றிய
சேயுயர் மதில்வகை செப்பு கின்றதே"

வேறு

"மாற்றவர்ம றப்படைம லைந்துமதில் பற்றி
நூற்றுவரைக் கொல்லியொடு நூக்கியெறி பொறியும்
தோற்றமுறு பேய்களிறு துற்றுபெரும் பாம்புங்
கூற்றமன கழுகுதொடர் குந்தமொடு கோண்மா"

"விற்பொறிகள் வெய்யவிடு குதிரைதொட ரயில்வாள்
கற்பொறிகள் பாவையென மாடமடு செந்தீக்
கொற்புனைசெய் கொள்ளிபெருங் கொக்கெழில்செய் கூகை
நற்றலைக டிருக்கும்வலி நெருக்குமர நிலையே"

"செம்புருகு வெங்களிக ளுமிழ்வதிரிந் தெங்கும்
வெம்புருகு வட்டுமிழ்வ வெந்நெய்முகந் துமிழ்வ
வம்புமிழ்வ வேலுமிழ்வ கல்லுமிழ்வ வாகித்
தம்புலங்க ளால்யவனர் தாட்படுத்த பொறியே."

"கரும்பொனியல் பன்றிகத நாகம்விடு சகடம்
குரங்குபொரு தகரினொடு கூர்ந்தரிவ நுண்ணூல்
பரந்தபசும் பொற்கொடிப தாகையொடு கொழிக்கும்
திருந்துமதில் தெவ்வர்தலை பனிப்பத்திருந் தின்றே"

---

* ஜீவக சிந்தாமணி, நாமகளிலம்பகம்.

என மிக்க விளக்கமுறக்கூறப்பட்டிருப்பதாலும், பாரதத்தில், இந்திரப்பிரத்தத்து மதில்வருணனையாக,

"சமர்முகப் பொறிகண் மிக்க தடமதிற் குடுமி தோறும்"

என்று கூறியதனுலும்,

இராமாயணத்தில், நகரப்படலத்தில்,

"சினத்தயில் கொலைவாள் சிலைமழுத் தண்டு சக்கரந் தோமர முலக்கை
கனத்திடை யுருமின் வெருவருங் கவண்க லென்றிவை கணிப்பில கொதுகின்
இனத்தையு முவணச் திறையையு மியங்குங் காலையு மிதமல நினைவார்
மனத்தையு மெறியும் பொறியுள வென்றால் மற்றினி யுணர்த்துவ தெவனே?"

எனக் கம்பநாடர் பாடியிருத்தலாலும்,

'மதிற்குமரி' என வெண்பாமாலையிற் காணப்படுதலாலும் மதில் எத்துணை உரம் பெற்றிருந்ததென்பது, தெள்ளிதின் உணரற்பாலது.

இத்தகைய எயிலினை எய்துவற்குமுன், மிக்க ஆழமுள்ளதும், முதலைகள் வாழ்வதுமான அகழினை 'மீதிடுபலகை'யாற் கடப்பர் என்பதையும் அவ்வகழியின்கண்ணும் போர்நிகழும் என்பதையும், அகழினைக் கடந்தபின்னர் ஏணிகொண்டு மதில்மீதேறுவர் என்பதையும் நோக்க, பண்டைத்தமிழர், போர்முறையில் மிக்க பயிற்சியும், திறமையும் வாய்ந்தவரென்பது தோன்றும்.

இவ்வுழிஞைப்போர்க்கு "யானையுங் குதிரையும்.........சிறந்தன அன்மையிற் கொள்ளாராயினர்" என உரையாசிரியர் உரைத்ததனுல், தமிழர்கள் யானை, குதிரை முதலியவற்றை வேண்டிய இடங்களில் உபயோகித்துவந்தனர் என்பது தெரியவரும். அன்றியும்,

"தானை யானை குதிரை யென்ற
நோனர் உட்கு மூவகை நிலையும்"

எனத் தும்பைத்திணையின் துறைகளை விரித்தவிடத்துத் தொல்காப்பியனுருரைத்த இலக்கணத்தானும் அது போதரும்.

இனி வாகைத்திணைக்குவகுத்த இலக்கணத்தால் அறியற்பாலன கூறுவோம்.

இதுகாறுங்கூறிவந்ததிணைகளில் நிகழ்ந்தஒழுக்கங்களெல்லாம் அரசர்க்கே யுரியனவாக, வெற்றிநிகழ்ச்சியைக்கூறும் இத்திணை எல்லாமாந்தர்க்கும் பொதுவானது. வெற்றி, போர்க்களத்து ஆயுதங்கொண்டுபொருதுபெறுவது ஒன்றுமாத்திரமன்றே; கல்வியினும், வாணிகத்தினும், பிறவற்றினும் தன்னை யொருவன், பிறர்க்குமேம் பட்டவனாகச் செய்துகொள்ளுமிடத்தும் வாகைத்திணைபொருந்து மென்பது ஆசிரியர்கருத்தாதல்,

"தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்த லென்ப"

என்று அவர் அதற்குச் சூத்திரம்செய்ததால் அறியப்படும். இது,

"பார்ப்பன வாகை வாணிக வாகை
வேளாண் வாகை பொருந வாகை
அறிவன் வாகை தாபத வாகை"

எனப் புறப்பொருள்வெண்பாமாலையினும், "நான்குவேதத்தினையுங் கற்றவன், தாபதர்க்கரசாய்ச் செம்மாந்திருக்கும்" முதலிய அதன் உரையாலும், கொள்ளக்கிடக்கும். இவற்றையெல்லா முள்ளடக்கித் தொல்காப்பியனார்,

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபி னரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்
பாலறிமரபிற் பொருநர் கண்ணும்

அனைநிலை வகையோ டாங்கெழு வகையில்
தொகைநிலை பெற்ற தென்மனார் புலவர்"

என்று சூத்திரம் செய்தது இங்கு நோக்கத்தக்கது.

இனிக் காஞ்சிததிணையின் இலக்கணத்தால் அறிந்துகொள்ளற்பாலன யாவை என்று ஆராய்வோம். யாக்கை, செல்வம், இளமை முதலிய இவ்வுலகத்து நிலைபெற்றுநில்லா என்பதைக்கூறும் காஞ்சியென்று முன்னரேசொல்லப்பட்டது. இவற்றின் நிலையாமையுணர்தலே நிலைபெற்ற வீட்டின்பம்பெறுதற்குக் காரணம் ஆதலால், காஞ்சியில், வீடுபேற்றுக்குநிமித்தம் விரித்துக்கூறினாரென்பது ஆயிற்று. வீடுபேறுநிமித்தமாகச் சான்றோர் பல்வேறுநிலையாமையை அறைந்த 'மதுரைக்காஞ்சி' இதற்கு உதாரணமாம்.

இந்நிலையாமையைச் சான்றோர், "எந்நா ளாயினுங் கூற்றுவன் வருவன், அந்நா ளவனைப் போற்றினும் போகான்....." முதலியன கூறி இளையோர்க்கு அறிவுறுத்துவர் என்பதும், அங்ஙனம் அறிவுறுத்தப்பெற்ற இளையோரும், அதனையுணர்ந்து, தக ஒழுகுவர் என்பதும், "மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையும்" என்று தொல்காப்பியர்கூறியதாற் போதரும்.

போர்க்களத்து வீரர்கள், இந்நிலையாமையை உணர்ந்து, தம் முயிரைப் பொருட்படுத்தாது, மிக்கவீராவேசங்காட்டி யொழுகுவர். தாம் புண்ணுற்றுத்தளர்ந்தவழி, பகைவர்கையாற்கொல்லப்படுதற்கு இசையாது, தாமே தமது புண்ணினைக் கிழித்துக்கொண்டு, தற்கொலைசெய்துகொள்ளுவர். இதற்கு, "புண்கிழித்து முடியும் மறத்தினானும்" என்பது இலக்கணம்.

இக்காலத்துப் போர்த்திறத்தாற் சிறந்துவிளங்கும் ஜப்பான் தேசத்துவீரர்களிற் பலர், சில ஆண்டுகளுக்குமுன் நடந்த ருஷிய ஜப்பானியயுத்தத்தில், இங்ஙனமே, பகைவர்கைப்பட்டு வசையுறுவதற்கு ஒவ்வாது, தம்மைத்தாமே புண்செய்துகொண்டு மாய்ந்தனர் என்பது நம்மிற் பலர்க்கும் ஞாபகத்தில் இருக்கலாம். தற்கொலை பிறவிடங்களிற் பாவமுடைத்தெனினும், சமர்க்களத்து அது மறக்காஞ்சி என்று பெயர்பெற்றுப் புகழினைவிளக்குமென்பது இதனாற் கொள்ளக்கிடக்கின்றது.

இன்னும் இக்காஞ்சித்திணையின் துறைவிரிகூறுமிடத்துப் போர்க்களத்துப்பட்ட வீரனுடைய மனைவிசெய்தி மிகவிளக்கமுறக் கூறப்பட்டிருக்கிறது.

கணவனிறந்தவுடன் அவனோடு மனைவி இறப்பது அக்காலத்துப் பெரும்பாலும் வழக்கமாயிருந்தது. மனைவியர், மனப்பூர்வமாகவே உடனிறத்தற்கு இயைந்தனர் என்பது கீழ்க்காட்டப்படும் செய்யுட்களால் அறியப்படும்.

"நீத்த கணவற் றீர்த்த வேலிற்
பெயர்த்த மனைவி காஞ்சி யானும்"

"கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமும்"

"காதல னிழந்த தாபத நிலையும்"

எனத்தொல்காப்பியனார் இலக்கணங்கூறியதனால் இவ்வழக்கம் தமிழ் நாட்டில்வழங்கிவந்ததென்பது வெளிப்படை.

புறநானூற்றில், பூதப்பாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு, தீப்பாய்வாளை, அங்ஙனம் செய்தலைத் தவிர்க எனக் கூறியவர்க்குப் பதிலுரைத்தசெய்யுளாகிய,

"பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரே மல்லேம் மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே."

என்பதனால், கணவற்பிரிந்தமனைவி தீப்பாய்தல் வழக்கமென்பதும், அத்தீக்கு அவள் அஞ்சுபவளல்லள் என்பதும், தன்கணவனுடன் தீப்பாய்ந்து ஒழியாக்கால் நெய்யின்றி, சோற்றைக் கீரையுடன்கலந் துண்டு, பாயில்லாப்பாழ்ந்தரையிலே துயின்று, காலங்கழிப்பள் என்பதும் போதரும். இங்ஙனம், கைம்மைநோன்பு கைக்கொள்வது ஒன்று, அன்றித் தீப்பாய்வது ஒன்று ஆகிய இதுவே கணவனைப் பிரிந்த காரிகைசெயல் என்பது,

"காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது
இன்னுயி ரீவர் ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்"

என மணிமேகலையிற் கூறியிருப்பதனாலும் அறியப்பெறும்.

இவ்வழக்கம் கொஞ்சகாலத்துக்குமுன்னரும் இருந்ததென்பது, செஞ்சிக்கோட்டைக்குச் சிற்றரசனாயிருந்த தேசிங்குராஜன்சரித் திரத்தை, கொச்சைத்தமிழ்நடையில், சிறுவர்படித்தற்கெழுதப்பட் டிருக்கும் "தேசிங்குராஜன்கதை" என்னும்புத்தகத்தில், அவன் நவாப்போடு சண்டைசெய்து, தன்னண்பன் இறந்தமைகாரணமாகத் தன்வாளாற் றன்னையேமுடித்துக்கொள்ள, அச்செய்திகேட்ட அவன் மனைவி, முதலில் தன் கணவன்மேற்பட்டகாயம் மார்பிற்பட்டதே யன்றி முதுகிற்பட்டதன்று என்பதைத்தெரிந்துகொண்டு, பின்னர்த் தீப்பாய்ந்தனள் எனக் கூறப்பட்டிருக்கின்றமையால் தமிழ்நாட்டு வீரர்களதுபெருமைக்கேற்பவே, அவர்மனைவியர்களும் ஒழுகிவந்த னர் என்பது தெரியவருகின்றது.

தமிழ்வீரர்களுடைய மனைவியர்தன்மை இவ்வாறாக அவரைப் பெற்றுவளர்த்த தாய்மார்தம் தன்மை சொல்லுவாம்.

தன்மகன் போர்க்களத்து இறந்தால், அதுபற்றித் தாய் மனம் வருந்தாது, அவன் முதுகுகாட்டித் திரும்பியோடிவராமல், போரின் கண்ணே வீரங்காட்டியமைக்கு மகிழ்வள்.

தன்கணவன் பொருதுமாய்ந்தபோருக்கே, ஒருத்தி தன் மக்களை ஒருவர்பின் ஒருவராக அனுப்பி, அவர்களும், அங்குப் புறங்காட்டாது வீராவேசங்கொண்டு பொருதுமாய்ந்தமைகேட்டும்,

தன் கடைசிமைந்தனைத் தக்கபுத்திமதிசொல்லிப் போர்க்கனுப்பினள் என்பது பண்டைத் தமிழ்ச்செய்யுளொன்றால் அறியக்கிடக்கின்றது.

அங்ஙனம், பொருதுமாயாது, தோற்றுப் புறங்காட்டிவரும் மைந்தனைத் தாய்மார்கள் மிகவும் இகழ்வர். அவரால், அவர் குலத்துக்கே, குறைவுவருதல்பற்றிப் பெரிதும் மனம்வருந்துவர். சிற்சில சமயத்துத் தாம், இத்தகையமகனைப் பெற்றோமே என்னும்வருத்தத்தால், தம்முயிரினையும் மாய்த்துக்கொள்வர்.

> " மாய்பெருஞ் சிறப்பிற் சிறுவர் பெயரத்
> தாய்தப வரூஉந் தலைப்பெய னிலையும் "

என்று தொல்காப்பியர்கூறியதனால் இது பெறப்படும்.

தன்மகன் போரிற்புறங்காட்டினன் எனக்கேள்வியுற்ற ஒரு முதியோள், அது உண்மையாயின் அவனுக்குப் பாலூட்டிய என் முலையினை அறுத்திடுவேன் என்றுகூறிச் சமர்க்களஞ்சென்று, அங்கு, படுகாயம்பட்டு இறந்துகிடந்த தன்மகனைக்கண்டு அவனால் தன்குலத்துக்குக் குறைவுநேரவில்லை என்றுணர்ந்து மகிழ்ந்தனள் என்னும் கருத்தினில் ஒரு புறநானூற்றுச்செய்யுள் காணப்படுகின்றது. அது பின்வருமாறு :—

> "நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
> முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
> படையழிந்து மாறின னென்றுபலர் கூற
> மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
> முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
> கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
> செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
> படுமகன் கிடக்கை காணூஉ
> ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே "

இதனால் தமிழ்வீரர்களுடைய தாய்மார்களின்தன்மை கூறப்பட்டது.

இனிப் பாடாண்டிணையிலக்கணத்தால் பெறப்படுவன சிறிது கூறுவாம்.

'பாடாண்' என்பது பாடுதல் தொழிலையும், பாடப்படும் ஆண் மகனையுங் குறிக்காது, அவனது ஒழுகலாற்றினை, அன்மொழித் தொகையாய்நின்றுகுறிக்கும் என்பது நச்சினார்க்கினியர்கருத்து.

பாட்டுடைத்தலைவனது வீரம், கொடை, அன்பு முதலிய குணங்களைப் புலவன் பாராட்டிப்பாடுவதெல்லாம் இத்திணையின் பாற்படும். இதற்குக்கூறிய இலக்கணத்தாற் 'பிள்ளைத்தமிழ்' ஆற்றுப்படை முதலிய தமிழ்ப்பிரபந்தங்கள் எவ்வெச்சந்தர்ப்பத்திற் செய்யப்படவேண்டுமென்பது அறியலாகும்;

"குழவி மருங்கினும் கிழவ தாகும்"

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்"

என்ப திலக்கணமாதலான்.

ஏழ்திணையிலக்கணவாயிலால் உணரப்பட்டவை இவை. பின் 'பொதுவியல்' என்னும் பேரால், இவ்வேழ்திணையிலும் பொதுவாக வருவனவற்றையும், இவற்று ளடங்காதவற்றையும் தொல்காப்பியர் சொல்லியிருக்கிறார். அவற்றை இங்குச் சற்று ஆராய்வோம்.

போர்தொடங்குமுன்னரே, கொற்றவைக்குப் பலிகொடுத்துவந்தனர் அக்காலத்து அரசர்கள் என்பது,

"மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும்"

என்னும் இலக்கணத்தாலும்,

போரிடை வீரங்காட்டிப் பொருதுவீழ்ந்தவீரனுக்கு, மரியாதை செய்வதற்காக, 'நடுகல்' நாட்டி அதனைத் தெய்வம்போற் பாராட்டி வந்தனரென்பது,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபிற் பெரும்படை வாழ்த்தல்"

எனவரு மிலக்கணத்தாலும் போதரும்.

கல்நடுதலின்விவரத்தை "கல்லினை நீர்ப்படுத்துத் தூய்மைசெய்தலும், அக்கல்லின்கண் மறவனைநடுதலும், அவன்செய்தபுகழைத்

தரும்படிபொறித்தலும், அக்கல்லைத் தெய்வமாக்கி அதற்குப் பெருஞ்சிறப்புக்களைப்படைத்தலும்" என ஓரிடத்தும், "நடுதற்கண் மடையும், மலரும், மதுவும் முதலியனகொடுத்துப் பீலித்தொடையலும், மாலையும் நாற்றிப் பல்லியம் இயம்ப விழவுச்செய்யுஞ்சிறப்பெல்லாம் நடுதலாய் அடங்கும்; நாட்டப்படுங்கல்லிற்குக் கோயிலும், மதிலும் வாயிலும் ஏனைச்சிறப்புக்களும் படைத்தல் பகுதியாய் அடங்கும்" எனப் பிறிதோரிடத்தும் நச்சினார்க்கினியர் விரிவாகவுரைந்திருப்பதனால், அக்காலத்திற் போர்க்களத்தில் மிக்கதைரியத்துடன் பொருதுமாய்ந்தவர்கள் தெய்வமாகக்கருதப்பட்டனர் என்பதற்குச் சான்றாகும். இக்காலத்துத் தமிழ்நாட்டில் ஆங்காங்குக்காணப்படும் 'மதுரைவீரன்'கோயில் 'கருப்பண்ணன்'கோயில் முதலியன, இங்ஙனம் போர்வீரர்க்குக் கல்நாட்டியதன்காரணமாக எழுந்தனவோ என்று ஐயுறுதற்கும் இடமுண்டு.

இன்னும், போர்செய்ததன்பயனாகப் பகைவரிடமிருந்து மிக்க பொருளினைக் கொள்ளைகொண்ட அரசர், அதனைத் தம்வீரர்க்கும் புலவர்க்கும் பங்கிட்டுக்கொடுப்பர் என்பதும், அவர்க்கு மிக்க ஊனும், மதுவும் கொடுத்து அவரை உற்சாகப்படுத்துவர் என்பதும், "பாதீடு" "உண்டாட்டு" "கொடை" என்னும் துறைகளின்பெயரமைப்பினாலே அறிந்துகொள்ளலாகும்.

மதுவுண்பது அக்காலத்துப் பெருவழக்காயிருந்தது என்பது, "தாங்கொண்ட மகிழ்ச்சியால், சுற்றத்தொடு கள்ளுண்டு மகிழ்ந்து விளையாடுதல்" என்று நச்சினார்க்கினியர்கூறுதலாலும், "தெளிகொண்ட, வெங்கள் மலிய விளிவதுகொல் வேற்றூர்மேல், செங்கண் மறவர் சினம்" என்னும் வெண்பாமாலைச்செய்யுளாலும், "தேட்கடுப்பன்ன நாட்படு தேறல்" எனப் பிறரும் கூறியிருப்பதனாலும், கம்பநாடரும், 'உண்டாட்டுப்படல'த்தில்,

"பூக்கமழோதியர் போது போக்கிய
சேக்கையின் பச்செருச் செருக்குஞ் சிந்தையார்
ஆக்கிய அமிழ்தென வம்பொன் வள்ளத்து
வாக்கிய பசுநறு மாந்தல் மேயினர்"

எனக்கூறி அக்கள்ளுண்டலின்மயக்கத்தால் நிகழ்ந்தவைகளை வருணித்துத் தொண்ணூறுகவிக்குமேற் பாடியிருப்பதாலும், சிறிதும் சந்தேகமின்றிக் கொள்ளக்கிடக்கின்றது.

இதுகாறும் தொல்காப்பியத்தில்விரித்துள்ள புறப்பொருளிலக்கணங் கருவியாகக்கொண்டு அறியப்பெற்றவை கூறினோம்.

இனித் தொல்காப்பியனார், உவமவியல், செய்யுளியல், மரபியல் இவற்றைப் பொருளதிகாரத்துட்சேர்த்ததனால், இவற்றைப்பற்றிச் சிலகூறி இவ்வாராய்ச்சியை முடித்துவிடுவோம்.

யாப்பினையும், அணியையும் பிற இலக்கணநூலார் பொருளின் வேறுபடுத்துக்கூறுவரெனினும், தொல்காப்பியனார் அவற்றைப் பொருளின்கணணேயே அமைத்தார்.

எல்லா அணிகளுக்குள்ளும் உவமையே சிறப்புடையதாகலானும், அவ்வுவமையடியாகவே, உற்றுநோக்கின், பிற அணிகள் பிறத்தலானும் உவமையொன்றினையே தொல்காப்பியனார்கூறினர். அதன்கண் அவர் 'உள்ளுறையுவமம்' என்பதன் இலக்கணங்கூறியுள்ளது புலவர்களாற் பாராட்டற்பாலது.

"எற்றவளை வரிசிலையோ னியம்பாமு னிகலரக்கி
சேல்தவளை தன்கணவன் அருகிருப்பச் சினந்திருகிச்
சூல்தவளை நீருழக்கும் துறைகெழுநீர் வளநாடா
மாற்றவளைக் கண்டக்கால் அழலாதோ மனமென்றாள்"

என்று சூர்ப்பணகை இராமனிடத்தில், சீதையைத் தான் எடுத்துச் செல்லமுயன்றதற்குக் காரணங்கூறியவிடத்தில், இராமபிரானுக்குக் கம்பர்கொடுத்திருக்கும் அடைமொழியில் 'உள்ளுறையுவமம்' அமைத்திருப்பது ஈண்டுக் கவனித்தற்பாலது.

மற்றும் 'உவமை'யானது, சிறப்புடையதாயிருத்தல்வேண்டுமென்பதும், ஆசிரியர்கூறும் இலக்கணம். பூனைபோற்பாய்ந்தான் என்னாது புலிபோற்பாய்ந்தான் என்னல்வேண்டுமென்பர் நச்சினார்க்கினியர். இதற்குச்சூத்திரம், "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை" என்பது. மற்றும், பொருளினை யுவமமாகமாற்றிக்கூறும் எதிர்நிலையணியும் ஆசிரியர்க்குடன்பாடு என்பது,

"பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃ துவம மாகும்"

என்னும் சூத்திரத்தாற்போதரும். "கண்போலம்பு, நுதல்போலும் கடுங்கார்முகமும்" என்பன இதற் குதாரணமாம்.

மரபியலின்கண்ணே, அக்காலத்துச்சொற்கள் இன்னவாறு வழக்காறுடையன என ஆசிரியர் கூறியிருக்கின்றனர். 'இது இக்காலத்து வீழ்ந்தது போலும்' எனப் பல இடங்களில் நச்சினார்க்கினியர்சொல்லும் உரையாலே, அக்காலத்திற்சொற்களிற்சில நச்சினார்க்கினியர்காலத்திலேயே வழக்கொழிந்தன என்பதுபோதரும்.

இக்காலத்தில்வழக்கற்றொழிந்தன இன்னும்பல ஆதல்வேண்டும். ஆதலால் அவ்வக்காலத்துக்கேற்ப, இன்ன இன்னசொற்கள் இன்ன பொருளில்வரவேண்டும்என இலக்கணம் அமைத்தல் முறை என்பது தொல்காப்பியனார்கருத்தாகின்றது.

இன்னும், இம்மரபியலுட்கூறியவற்றானே, ஓரறிவுயிர், ஈரறிவுயிர்முதலாக..........ஆறறிவுயிர் ஈறாகவுள்ளவற்றின் இலக்கணங்களும் பிறவும் அறியப்படுமெனினும் அவையெல்லாம் எடுத்தியம்பின் விஷயம் மிகவும்விரியும் ஆதலால் இதனோடு நிறுத்திக்கொண்டு, நச்சினார்க்கினியர் உரையின்கண்ணே குறித்துச்செல்லும் குறிப்புக்கள் தேசசரித்திர ஆராய்ச்சிக்குப் பயன்படுமாறுகூறுவோம்.

இவ்வுரையாசிரியர், வஞ்சித்திணைச்சூத்திரவுரையில், "அது கருவூரிடைச் சேரமான் யானையேறிந்தாற்போல்வன" என்று கூறியதனானும், "கடலகத்துப்பட்டுக் குமரியாறும் பனைநாட்டோடு கெடுவதற்குமுன்" என மரபியலின் "வினையினீங்கி" என்னும் சூத்திரவுரையிற்கூறியதனானும், "அது முதனூலாகிய அகத்தியம்போலும்; என்னை? அஃது இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்று மூன்று பிண்டத்தினையும் அடக்கிநிற்றலின்" எனச் செய்யுளியலில், "மூன்றுறுப்படக்கிய" என்னும் சூத்திரவுரையிற்கூறியதனானும், முறையே, கருவூரில் சேரன்வெற்றிகொண்டதும், குமரியாறும் பனைநாடும் கடலாற் கொள்ளப்பட்டதும், அகத்தியம், முத்தமிழிலக்கணமுங் கூறியதோர்

நூல் என்பதும் அறியப்படும். இங்ஙனம் அவர் உரையிற்குறித்துளவற்ருல் அறியப்படும் பிறசரித்திரவிஷயங்கள் பலவுள.

இதுகாறும் ஆராய்ந்தவாற்ருல், தமிழிலக்கணத்துட்காணப்படும் பொருள், அகம் புறம் என்னும் இருவகைத்து, எனவும், அவற்றுள் அகப்பொருள் தலைவன் தலைவியர் உள்ளத்தேநிகழும் காமஇன்பத்தைக்கூறுவதென்றும், அதற்கு ஆசிரியர் வகுத்த இலக்கணத்தால், தமிழ்நாட்டில் காந்தர்வமணம் நடைபெற்றுவந்ததென்றும், வருணாச்ரமமுறை வழுவாதிருந்ததென்றும், ஆரியர்களே தமிழர்க்கு மணமுறை ஏற்படுத்தினர் என்றும், தலைமகன் ஒன்றுக்குமேற்பட்டமகளிரை மணந்துகொள்ளலாமென்றும், தலைவியை இன்னகாரணங்களாற் பிரிந்துசெல்லலாம் என்றும், அக்காலத்து வேசையர்செல்வாக்கு மிகுந்திருந்தது என்றும், அரசர்கள் வேற்றரசரோடு எவ்வெக்காரணங்களாற் போர்தொடங்கினர்கள் என்றும், அவர்கள் வீரர்களிடத்து எங்ஙனம் பெருந்தன்மைபாராட்டினர்களென்றும், வீரன் போர்க்களத்துமாள, அவன்மனைவி இன்னவாறெழுகினள் என்றும், அவன்தாய் இன்னவாறு ஒழுகினள் என்றும், பிறவும் தொகுத்துக் காட்டப்பட்டன.

தொல்காப்பியம்:
பொருளதிகார ஆராய்ச்சி
முற்றுப்பெற்றது.

வே. முத்துஸாமி ஐயன்,
எம். ஏ; எல். டி

600 008
172263

(முன்னட்டையின் பிற்பக்கத்தின் தொடர்ச்சி.)

2. ‘‘வித்தியாபாநு’’ப் பத்ரிகை, மதுரை:-‘‘இலக்கணங்களுள் பொரு லக்கணம் சிறந்ததென்பதும், அதனை நன்கு ஆராய்ந்த புலவர்கள் ண்டைக்காலத்தும் அரியரே யென்பதும் தமிழ்வல்லார் நன்கறிவர். ......இங்ஙனம் அருமைவாய்ந்த (தொல்காப்பியம்) பொருளிலக் ணத்தைச் செவ்வனே ஆராய்ந்து அரிய பெரிய விஷயங்கள் பல ற்றை எடுத்து விளக்கி ஐயரவர்கள் வெளியிட்டிருப்பது நம்மவர்க் நப் பேருபகாரமே யாகும். பொருளிலக்கணம் கற்போர்க்கு இது சிறந்த துணையாகும்”.

3. யாழ்ப்பாணம், நாவலர் கோட்டம், சைவவித்யாசாலைத்தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் அ. குமாரசாமிப்புலவரவர்கள் கூறுவது.—‘‘இந்நூல் ......நமக்கொரு நல்விருந்தாயிற்று. ஐயரவர்கள் பொருளதிகாரத் தைப் பூரணமாக ஆராய்ந்து முக்கிய பாகங்களை முட்டற விளக்கிக் கத்திய ரூபமாய் எழுதிமுடித்திருக்கிறார்கள். ஆங்காங்கே சரித் திரங்களை அமைத்துக்காட்டுதலும், ஏனைப்பொருளிலக்கணங்களை எடுத்துக்காட்டுதலும், இப்போது வழங்கும் கம்பராமாயணம், வில்லி பாரதம், சிந்தாமணி, சிலப்பதிகாரம், முதலிய நூற்கவிகளை உதாரணங் களாய் உறுத்திக்காட்டுதலும், மேலைத்தேச நூற்கருத்துக்களை சில் விடங்களிற் பொருத்திக்காட்டுதலும், ஐயரவர்களுடைய இலக்கிய இலக்கண நூற்பயிற்சியையும் ஆங்கில நூற்பயிற்சியையும் அனைவர்க் கும் அறிவிக்கும். இக்காலத்திலே ஐயரவர்கள் தமிழ்நூல்களிலும் பொருளதிகாரத்திலும் கொண்டிருக்கும் பேரபிமானத்தையும் ஆராய் வையும் இந்நூலையும், நாம் பாராட்டுதல்போலத் தமிழறிஞர்கள் யாவரும் பாராட்டி நன்கு மதிப்பார்கள் என்பது நமது கருத்து.”

4. சென்னை, ந்யூயிங்டன் (இளவரசர்கள் கல்விபயிலும்) கல்விச் சாலைத் தமிழ்ப்புலவர், ப்ரஹ்மஸ்ரீ. உ. வே. கா. ஸ்ரீ. கோபாலாசார்ய ரவர்கள் கூறுவது:—‘‘ஆராய்ச்சி செய்தவளவில் நன்றாயிருக்கின் றது. இப்போது தாங்கள் எழுதி வெளிக்கொணர்ந்த ஆராய்ச்சி பொருளதிகாரம் படிக்கப்புகும் மாணாக்கர் உளராயின் அன்னார்க்கு உபகாரமாகும் என்பதில் ஐயமில்லை.”

5. திருச்சிராப்பள்ளி, எஸ். பி. ஜி. காலேஜ், தலைமைத் தமிழ்ப்புலவர், ஸ்ரீமான் பண்டிதர்-மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் சொல்லுவது:—‘‘பொருளதிகாரம் படிக்கப்புகும் மாணாக்கர் முன்னுரையாகப் படித்து விஷயங்களைப் பிண்டமாக வுணர்ந்துகொள்வதற்கும், ஒருவிஷயத் தைப்பற்றி யெழுந்த பலர் கருத்துக்களை ஓரிடத்துணர்ந்துகொள்வ தற்கும் அது மிக்க உதவியாயிருக்கும்.”

Some opinions about this book.

1. M. R. Ry. C. SRIKANTA MUDALIAR A. Litt. D., Colombo:— "Allow me to express to you t *gratification and delight* your *instructive* essay on the m ancient Tamil work extant has afforded me......... Th orochure can be *most confidently* recommended to Tami Students of the University."

2. M. R. Ry. T. A. GOPINATHA RAO Avl., M.A Supt. of Arhaeology, Trivandrum:— "I have been *systematically* studying your serial article in the 'Sen Tamil and beer finding it *interesting*."

3. M. R. Ry. S KRISHNASWAMI AYYANGAR Avl, M. A., Professor, Central College, Bangalore:— " hasten to congratulate you on the *excellence* of your performance ....These subjects *do* require popularizing and I am glad that one so competent as you should take up work like this."

4. M. R. Ry. A. MADAVIAH Avl, B. A., the reputed author of several high class Poems, Novels and Dramas:— "Your discourse on Porul-Adhikaram is *very clear and interesting*; and I have no doubt it will induce such as have not had the pleasure till now, to study the original Works of the Sangam period are indeed a priceless mine to the Antiquarian, and you have done *a great and useful service* by drawing attention to this particular work, which, I am afraid has been more spoken of than read among modern students of Tamil Literature".

—:(o):—

(Continued on the reverse of the front cover page)

☞ இப்புஸ்தகம் வேண்டுபவர், வே. முத்துஸாமி ஐயர் எம். ஏ. எல். டி., பள்ளிக்கூட ஸப் அ. இன்ஸ்பெக்டர், அறப்புக்கோட்டை என்னும் விலாஸத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், இந்நூலாசிரியர் இயற்றியுள்ள "பத்மினி-இந்துதேச சரித்ர ஸம்பந்தப்பட்ட ஒரு உண்மைத் தமிழ்க்கதை" என்னும் நாவலும், 'தனிப்பா நாற்பது' என்னும் செய்யுள்நூலும் முறையே விலை அணா 12-க்கும், அணா 2-க்கும் ஐயரிடம் கிடைக்கும்.